

சாது சுந்தர் சிங் அருளுரைக் குட்டிக்கதைகள் ஐம்பது

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

சாது சுந்தர்சிங்
அருளுரைக் குட்டிக்கதைகள்
ஐம்பது

Specimen copy

தொகுப்பாசிரியர்

எஸ்தர் கலாவதி

பதிப்பாசிரியர்

எச். பி. ராஜ்குமார்

அன்புமலர் வெளியீடு

H.B. RAJKUMAR
30, 12th Street,
Padi Pudu Nagar,
Anna Nagar West,
MADRAS – 600 101

அன்புமலர் வெளியீடு – 3
புனிதா ராஜ்குமார் நினைவு வெளியீடு – 61

Copyright

First Published, May 1982
Reprinted, May 1984
Reprinted, May 1987
Reprinted, August 1991
This edition, January 1995

1. நீயே என் குரு!

இயேசு கிறிஸ்துவைக் குறித்துக் கேள்விப்பட்ட சிறு பெண்ணொருத்தி திபேத் நாட்டின் கிராமம் ஒன்றில் வாழ்ந்து வந்தாள். அவள் இயேசுவின்மேல் செலுத்தும் அன்பை அறிந்த புத்தமதகுரு, அவளைக் கண்டித்தார். அவளுக்குத் தண்டனை யாக மூன்று நாட்கள் உணவேதும் தராமல் அவளை ஓர் அறையில் அடைத்துப் போட்டார். தண்டனை அச்சிறுமிக்குச் சிரமமாக இருந்தபோதிலும் கிறிஸ்துவை விசுவாசித்தது தவறு என ஒப்புக்கொள்ளவில்லை. அவருக்காகத் தான் அறையில் அடைபட்டிருப்பதைக் குறித்தும் வருந்தவில்லை. அங்கிருந்த வாறே எந்நேரமும் அவள் ஜெபித்துக் கொண்டிருந்தாள். அற்புத மான அமைதி அவளை நிரப்பியது. மூன்று நாட்களுக்குப் பிறகு புத்த மதகுரு அந்த அறைக்குள் சென்று பார்த்தார். ஒரே ஆச்சரியம் அவருக்கு! சிறுமியிடம், "நீ கிறிஸ்துவைப் பற்றி அறிந்திருப்பது என்ன?" என்று கேட்டார் அவர். "அவரைப் பற்றி அதிகமாக எனக்குத் தெரியாது. ஆனால், ஒன்றுமட்டும் நிச்சயம்; நான் அவரை அறிந்திருக்கிறேன்" என்றாள். அவர் அவளை அறிவற்ற முட்டாள் என்று கடிந்து கொண்டபோது மீண்டும் அவள், "நான் என் பெற்றோரை அறிந்திருப்பதைவிட அவரை நன்கறிவேன். அவர் எனக்குள்ளேயே வாழ்கிறார். உலகத்தால் கொடுக்கவோ, பறிக்கவோ முடியாத ஜீவனை இயேசு தருகிறார்—" என்றாள். இதைக்கேட்ட புத்த மதகுரு அந்தப் பெண்ணை மேலும் 24 மணி நேரத்திற்கு உணவின்றி அடைத்து வைத்தார். அதன் பின்பும் அவள் ஜெபித்துக் கொண்டும், பாடிக் கொண்டும் இருந்தாள். அவள் உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கியது. உடல் களைப்புறவில்லை. மேலும் மூன்று நாட்கள் அந்த அறையிலேயே அடைக்கப்பட்டும் அச் சிறுமியின் உள்ளத்தில் அமைதியும், ஆனந்தமும் குடிகொண்டிருந்தது. அதைக் கண்ட புத்த மதகுரு நெகிழ்வுற்று, "நீயே என் குரு" என்று அறிக்கையிட்டார். இயேசு கிறிஸ்துவை அறிந்து கொள்வது வயதையோ, கல்வியையோ பொறுத்த செயலல்ல.

நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்; சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்.

— யோவான் 8:31, 32

2. பாவம் என்னும் பாம்பு

நீண்டகாலமாய் நோய்வாய்ப்பட்ட மனிதன் ஒருவன் இருந்தான். தன் பலத்தை எல்லாம் இழந்து பலவீனப்பட்டிருந்த அவனுக்கு மிகச் சில வாழ்நாட்களே எஞ்சியிருந்தன. ஒருநாள் அவன் தனிமையில் படுத்திருந்தபோது தன்னை ஒரு பாம்பு நெருங்கி வருவதைக் கண்டான். தன் உயிரைக் காத்துக் கொள்ள அவன் விரும்பினாலும் அவனால் முடியவில்லை. அவனுக்கு உயிர் இருந்தது. ஆனால் அந்த உயிரினால் பலனில்லை. ஒரு கல்லை எடுத்து வீசி அப்பாம்பைக் கொல்ல அவனுக்குச் சக்தியில்லை. பாம்பு வருவதைப் பார்த்து அஞ்சி நடுங்கத்தான் அவனால் முடிந்தது. அது அவனைத் தீண்டிய சிறிது நேரத்திற்குள் அவன் வாழ்வும் முடிந்தது. அதன்பின் அவனுடைய உறவினன் ஒருவன் வந்து அப்பாம்பை அடித்துக் கொன்றான். அவன் பலசாலியாக இருந்ததால் அப் பாம்பைக் கொல்ல அவனால் முடிந்தது. கிறிஸ்தவர் அநேகர் உயிர் பெற்றிருக்கிறார்கள். ஆனால் பாவம் என்னும் நச்சுப்பாம்பைக் கொல்லும் சக்தி அவர்களுக்கில்லை. பெலனில்லாத உயிரினால் பலனில்லையே? இதன் விளைவாக சாத்தான் எனப்படும் பகைவன், பாவம் என்னும் விஷத்தால் தீண்டி அவர்களைக் கொன்று போடுவான். நமதாண்டவரோ ஜீவனை மட்டுமல்ல; பரிபூரண ஜீவனைத் தருவதாக வாக்களித்திருக்கிறார். பரிபூரண ஜீவனைப் பெற்றிருப்போர் பாவம் என்னும் பாம்பைக் கொல்லும் சக்தியுடையோர்!

திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும் அது பரிபூரணப்படவும் வந்தேன்.

— யோவான் 10:10.

3. புதையல்

இரண்டு புதல்வர்களையுடைய தந்தையொருவன் இருந்தான். அவன் தன் மக்களையழைத்து, 'நமது வயலில் ஒரு பெரும் புதையல் இருக்கிறது. உடனே அதைத் தோண்டி எடுங்கள்' என்று கட்டளையிட்டான். அவ்விருவரும் மிகுந்த மகிழ்ச்சி கொண்டனர். 'தங்கமும் வெள்ளியும் நிலத்தில் புதையுண்டு கிடக்கிறது. அகழ்ந்து அவற்றை எடுப்போம்' என்று பேசிக் கொண்டார்கள். ஆனால் அந்தத் தந்தை கூறியதன் பொருள் அதுவல்ல. அந்தக் கிராமத்தில் தண்ணீர் வசதியில்லா திருந்தது. மூன்று மைல்களுக்கப்பாலிருந்து நீர் கொண்டு வர வேண்டும். இரு சகோதரர்களும் தினந்தோறும் விடாது நிலத்தைத் தோண்டலானார்கள். தகப்பன் அவர்களை ஊக்குவித்தான். 'மனந்தளராமல் தோண்டுங்கள்; மிகவும் அருமையானதைக் கண்டுபிடிப்பீர்கள்' என்று ஆர்வம் புகட்டினான். சில நாட்கள் கழிந்த பின் சகோதரர் இருவரும் களைப்புற்று மனம் சோர்ந்தனர். 'எல்லாம் வீண், தங்கமும் வெள்ளியும் கிடைத்தால்கூட நாம் தாகத்தால் மடிந்து விடுவோம். தண்ணீரே தங்கத்தைவிட அரியது என்று புலம்ப ஆரம்பித்தனர். அச்சமயம் திடீரென்று ஆழத்திலிருந்து ஒரு நீரூற்று சுரந்தது. சகோதரர்கள் ஆனந்தக் கூத்தாடினர். தந்தையிடம் ஓடிச் சென்று விவரமறிவித்தனர். 'தண்ணீருக்காக நிலத்தைத் தோண்டும்படி உங்களிடம் நான் கூறவில்லை. அவ்வாறு கூறியிருந்தால் நீங்கள் இவ்வளவு கஷ்டப்பட்டு உழைத்திருக்க மாட்டீர்கள். மற்றவர்கள் உழைக்கட்டும் என்று மறுத்திருப்பீர்கள். புதையலிருப்பதாகச் சொன்னபடியால்தான் உடனே போனீர்கள். பொன்னுக்காக நீங்கள் போனாலும் பொன்னைவிட அரிய பொருளைக் கண்டுபிடித்தீர்கள்' என்று அத்தந்தை கூறினான்.

ஜெபம் என்பது நிலத்தைத் தோண்டுவது போன்ற ஒரு பயிற்சி. மனிதனின் ஆன்மீகவாழ்வை அது சிறப்புறச் செய்கிறது.

சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் ஜெபம்பண்ண வேண்டும்.

— லூக்கா 18:1

4. ஆடு

நூற்றுக்கணக்கான ஆடுகளுடைய ஒரு மனிதன் இருந்தான். ஒருநாள் சில ஆடுகள் காணாமற்போனபோது அவற்றைத் தேடிக் கண்டுபிடிக்குமாறு தன் பணியாட்களிடம் கூறினான். ஆனால், கொடிய மிருகங்களுக்கு அஞ்சி அப்பணி யாட்கள் ஆடுகளைத் தேடிப்போகத் தயங்கினார்கள். ஆகையால், அந்த எஜமான் தானே போய்த் தன் ஆடுகளை மீட்டுவரத் திட்டமிட்டான். தான் இருக்கும்வண்ணமாகப் போனால், ஆடுகள் தன்னைப் புரிந்துகொள்ளமாட்டா என்று எண்ணினான். ஆடுகளுக்குத் தங்களை மேய்ச்சலுக்கு அழைத்துச் செல்லும் பணியாட்களைத்தான் தெரியும். ஆகவே, தானும் ஓர் ஆட்டைப்போல் தோற்றமளித்தால், ஆடுகள் தன்னை ஏற்றுக்கொண்டு தனக்குக் கீழ்ப்படியும் என்று அம் மனிதன் நினைத்தான். எனவே, அவன் ஓர் ஆட்டுத் தோலைத் தன்மீது போர்த்திக்கொண்டு, ஆட்டைப்போல் உருவெடுத்து ஆடுகளைத் தேடிச் சென்றான். அவ்வாறு சென்றதால் ஆடுகள் யாவும் பத்திரமாய்த் திரும்பி வந்தன. இதைக் கண்டு மகிழ்ந்த அம்மனிதன், தன் வேடத்தைக் கலைத்தான். காணாமற்போன ஆடுகளைக் காப்பாற்ற மனிதன் ஆட்டைப் போலானான். ஆடுகள்மீது அவனுக்கிருந்த அன்பினால் அவ்வாறு செய்தான். இயேசு கிறிஸ்துவும் இவ்வாறே பாவிகளை மீட்க மனிதனாக அவதரித்தார்.

நானே நல்ல மேய்ப்பன்; நல்ல மேய்ப்பன் ஆடுகளுக் காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்.

— யோவான் 10:11



ஆட்டைப்போல வேடமிட்டான்
(கதை எண் 4)

5. புத்துயிர்

இளைஞன் ஒருவன், ஓர் உயர்ந்த மலையின் உச்சியிலிருந்து தவறிக் கீழே விழுந்துவிட்டான். உடல் முழுவதும் காயமுற்று இரத்தம் பெருக்கெடுத்ததால் அவன் மரணத் தருவாயிலிருந்தான். மருத்துவரும் தன்னால் எதுவும் செய்ய வியலாது என்று கூறிவிட்டார். 'அவனது எலும்புகள் முறிந்திருந்தால் சரிக்கட்டலாம். நோய்வாய்ப்பட்டிருந்தால் மருந்து கொடுத்து சுகமாக்கலாம். ஆனால், அவன் இரத்தமனைத்தையும் இழந்துவிட்டான். இரத்தம் இல்லாவிட்டால் உயிரை இழப்பது நிச்சயம். உட்செலுத்தப்பட வேண்டிய இரத்தம் என்னிடத்தில் இல்லையே' என்று அங்கலாய்த்தார் மருத்துவர். என் மகனைக் காப்பாற்ற வழியே இல்லையா எந்று தந்தை கதறியபோது, 'யாராவது தனது இரத்தத்தைக் கொடுக்க முன் வந்தால் அவன் உயிர் பிழைப்பான்' என்றார் மருத்துவர். தன் மைந்தன் மீது கொண்டிருந்த அளவற்ற அன்பு காரணமாகத் தன் சொந்த இரத்தத்தை அவனுக்காகக் கொடுக்கச் சித்தமானான் அத்தகப்பன். அவன் உடம்பிலிருந்து ஒரு நரம்பு வெட்டப்பட்டது. தகப்பன் உடலிலிருந்த இரத்தம் மகனின் உடலுக்குள் செலுத்தப்பட்டது. சில மணி நேரத்திற்குள் முதியவனான அத்தகப்பன் பெலவீனமுற்று மரித்தான். ஆனால் மகன் பிழைத்துக்கொண்டான். தன்னை மரணத்திற்கு ஒப்புக் கொடுத்து, தன் மகனுக்கு வாழ்வளித்தது அத்தந்தையின் பேரன்பு. மலையிலிருந்து விழுந்து காயமுற்று இரத்தத்தை இழந்தவனைப்போல, நாமும் பரிசுத்தத்தின் உயர்விலிருந்து பாவப் படுகுழியில் வீழ்ந்து ஆன்மீக வாழ்வை இழக்கிறோம். நமக்காக கிறிஸ்து தம் புனித இரத்தத்தைச் சிலுவையில் சிந்தி நமக்குப் புத்துயிரூட்டினார்.

இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்.

— 1 யோவான் 1:7

6. அதிசய உண்மை

திபேத் நாட்டு மக்கள், என்னை அங்கு வரக்கூடாது என்று பலமுறை எச்சரித்தும், நான் மீண்டும் மீண்டும் சென்றபடியால் படுகோபமுற்று என்னைக் கொல்லப் போவதாகக் கூச்சலிட்டனர். லாமா ஒருவர் 'இவனைக் கொல்வதில் பயனில்லை. சர்தார்சிங்கின் மரணம் மக்களுக்குள் பெரும் மதிப்பை உண்டுபண்ணியிருக்கிறது. இவனைக் காட்டுக்குள் விரட்டித் துரத்துங்கள்' என்றார். இதன்படி அவர்கள் என்னை அடர்ந்த காட்டுப்பகுதிக்குள் அடித்துத் துரத்தி அங்கிருந்த ஒரு மரத்தில் இரும்புச் சங்கிலிகளால் பிணைத்துக் கட்டிவிட்டனர். அந்தச் சங்கிலியும் ஒரு பூட்டால் பூட்டப்பட்டிருந்தது. என்னிடத்திலிருந்த ஒரே சொத்து ஒரு கம்பளிப் போர்வையும், என் வேதாகமும்தான். அவற்றையும் அவர்கள் பறித்துக் கொண்டனர். கொடிய குளிர் என்னை வதைத்தது. இது மிகக் கடுமையானதோர் அனுபவம், ஆனாலும் என் இரட்சகர் என்னோடிருந்ததே எனக்குப் போதுமானதா யிருந்தது. குளிரின் கொடூரத்தால் அன்றிரவு நான் தூங்க முடியவில்லை. அதிகாலையில் என் மரணவேளை வந்து விட்டதாகவே எண்ணினேன். அப்போது அற்புதமானதோர் அமைதி என்னுள்ளத்தில் பரவியது. கிறிஸ்து ஜீவனுள்ள கிறிஸ்துவாக, என்றென்றுமுள்ள இறைவனாக இல்லையேல் கடுந்துன்பத்தின் நடுவில் என்னை அந்த இனிய மகிழ்ச்சி ஆட்கொண்டிருக்க முடியாது. அந்த அமைதியும், தூய ஆவியின் அக்கினியும் என்னை ஆட்கொண்ட மாத்திரத்தில் என் வேதனைகளை மறந்தேன். கடுமையான குளிரை மறந்தேன். சுகமாக தூக்கத்தில் ஆழ்ந்தேன். பின் ஏதோவொரு சத்தம் கேட்டு விழித்துக்கொண்டபோது, அந்த மரத்தில் பழுத்துக் கனிந்த பழங்களிருப்பது புலப்பட்டது. அவற்றிலொரு பழம்தான் கீழே விழுந்து என்னை எழுப்பியது. அத்துடன் பூட்டு திறந்திருப்பதையும் கண்டேன். எனக்கு விடுதலை கிடைத்து விட்டது. இனிமையான ஒரு கனியைப் புசித்த பின், மீண்டும்

கிராமத்திற்குச் சென்று நற்செய்தியைக் கூறலானேன். அங்கிருந்த மக்கள் என்னைக் கண்டு அதிசயிக்கலாயினர். நிச்சயம் இறந்திருக்க வேண்டிய நான் உயிரோடிருந்தேன். பூட்டப்பட்டிருந்த சங்கிலியையும், பூட்டையும் காண அவர்கள் காட்டுக்குள் விரைந்தனர். அப்பூட்டுக்கு இருந்த ஒரே திறவுகோலும் லாமாவின் வசமிருந்தது. இங்கு இரண்டு அற்புதங்கள் நடந்துள்ளன. துயரத்தின் நடுவில் நானடைந்த அமைதியும், பூட்டுத் திறக்கப்பட்டு நான் பெற்ற விடுதலையும் இருபெரும் அற்புதங்கள். ஜீவனுள்ள கிறிஸ்துவின் வல்லமையினால் இவை நடந்தேறின. அவர் தம் மக்களுக்கு உதவிபுரிய வல்லவர், அவர்களுடன் அவர் எப்போதுமிருக்கிறார். உயிருள்ள கர்த்தருக்குச் சாட்சியாக நானிருக்கிறேன்.

நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்.

— தானியேல் 3:17

7. காற்றால் கடக்கலாம்!

ஒரு சமயம் ஒரு நதியைக் கடக்க நான் எண்ணினேன். அப்போது அங்கு பாலமோ, படகோ இல்லாதது கண்டு அந் நதியை எவ்வாறு கடப்பது என்று திகைத்துக் கொண்டிருந்தேன். 'காற்றினால் நதியைக் கடக்கலாமே' என்று அங்குவந்த மனிதனொருவன் என்னிடம் கூறினான். 'இவன் ஒரு முட்டாள், காற்றை சுவாசிக்க முடியும்; ஆனால் அது எப்படி என்னை அக்கரைக்கு அழைத்துச் செல்ல முடியும்?' என்று எண்ணினேன். ஆனால் அம்மனிதன் தோலாலான ஒரு துருத்தியை எடுத்து அதனுள் காற்றைச் செலுத்தி அதன்மீது உட்காரும்படி என்னிடம் கூறினான். நான் துருத்திமீது அமர்ந்து, நீரில் மிதந்து அக்கரையை அடைந்தேன். எங்கும் நிறைந்திருந்த காற்று நான் நதியைக் கடக்க உதவவில்லை. அது துருத்தியில் அடைக்கப்பட்டபோதோ எனக்கு உதவி புரிந்தது. இதேபோல ஆவியான தேவன் எங்குமிருக்கிறார். பாவிகளைக் காக்கும்

பொருட்டு அவர் அவர்களைப் பின்னாலிருந்து தள்ளிச் செல்லுவதில்லை. நமது மனித உடலைத் தரித்து ஆண்டவர் மானிட அவதாரமானார். வார்த்தை மாமிசமாகியது. கடவுளின் ஆவி மனிதரை மீட்க மனிதனாக மாறியது. தோல் துருத்தியிலிருக்கும் காற்றை நாம் காணமுடியாது. அதுபோல இயேசு கிறிஸ்துவிலிருந்த கடவுளை யாரும் காணவில்லை. ஆனால் ஜெபத்தில் அவருடன் வாழ்வோருக்கு அவர் மனித உருவெடுத்த இறைவன் என்பது தெரியும். அவர் பாவிகளை மீட்க மனித உருவெடுத்த இறைவன் என்பது தெரியும்.

அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்.

— யோவான் 1:14

8. ஜீவ தண்ணீர்

என் நண்பரொருவரை மலையுச்சிக்குக் கூட்டிச் சென்ற மக்கள், “நீ உன்னைக் காப்பாற்றிக்கொள்ள விரும்பினால் உன் மதத்தைக் கைவிட்டுவிடு. இல்லாவிட்டால் உன்னைத் தூக்கி எறிந்துவிடுவோம்” என்று பயமுறுத்தினர். அவரோ, ‘நான் குற்றமேதும் செய்யவில்லை; என்னைத் தண்டிப்பானேன்? என் மீட்பரைப் பற்றி மட்டுமே மற்றவருக்குச் சொல்கிறேன்’ என்றார். அவர் தம் விசுவாசத்தைக் கைவிடமாட்டார் என்று கண்டு கொண்ட மக்கள், “இப்பொழுதே உன்னைக் கொல்கிறோம்” என்று சூளுரைத்து மலையுச்சியிலிருந்து கீழே தள்ளினர். ‘தேவனே உம்முடைய கரங்களில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்’ என்று கூறியபடியே பள்ளத்தில் வீழ்ந்த அவர்மீது அம் மக்கள் கற்களை வீசியெறிந்தனர். ‘மரண மடைந்துவிட்டான்’ என்று கூறி, பின்னர் கலைந்து சென்றனர். அரைமணி நேரத்துக்கு மயக்கமுற்ற நிலையில் இருந்த பின் உணர்வுற்றுத் தம் தலையை உயர்த்திப் பார்த்தார் அவர். தம்

உடல் முழுவதும் இரத்தம் பெருக்கெடுத்தோடுவதைக் கண்டு 'எனக்குத் துணை செய்ய யாரும் இல்லை. எல்லோரும் என்னைத் தனியே தவிக்க விட்டுவிட்டனர்' என்று புலம்பினார். அப்போது இனிமையானதொரு குரல் அவருக்குக் கேட்டது. 'எல்லோரும் உன்னைக் கைவிடலாம். ஆனால் நான் உன்னோடிருக்கிறேன்' என்றது. யாரோவொரு உத்தமன் தனக்கு உதவி செய்ய வந்திருப்பதாக நினைத்துக் கொண்டார். சுற்றிலும் பார்த்தபோது ஒரு மனிதர் வந்து கொண்டிருந்ததைக் காண முடிந்தது. அம்மனிதர் அவரை ஒரு குன்றினருகில் சாய்ந்த நிலையில் உட்காரவைத்து, அவர் குடிப்பதற்குத் தண்ணீர் கொண்டு வந்தார். தனது மரண வேளைக்கு முன் தனக்குத் துணைசெய்ய வந்திருப்பவராகக் கருதி அவருக்குத் தன் நன்றியைத் தெரிவித்தாராம் என் நண்பர். அம் மனிதர் யாரென்று அவருக்குத் தெரியாவிட்டாலும், ஆண்டவரின் பிரசன்னம் தன்னோடிருப்பதை அவரால் உணர முடிந்தது. தண்ணீரை மொண்டு வருவதற்கு எவ்வித பாத்திரமும் அங்கில்லை. அம் மனிதர் தம் கரங்களிலேயே அதைக் கொண்டு வந்தார். இருமுறை அவ்வாறு நீர் கொண்டு வந்து பருகச் செய்தார். மூன்றாம்முறை அவர் வந்தபோது, அவர் கைகளில் காயங்களிருப்பதை நண்பர் கண்டார். அக் காயங்களைக் கண்டதும் அவருக்கு ஆச்சரியமுண்டாயிற்று. அத்துடன் அவர் யாரென்பதும் விளங்கிவிட்டது. 'என் ஆண்டவரே, என் தேவனே' என்று அவர் பாதம் பணிந்தார். 'என்னைக் கை விட்டுவிட்டீரே என்று நினைத்தேன். ஆனால் இதோ என்னுடனிருக்கிறீர்' என்று கூவி ஆர்ப்பரித்தார். அத்துடன் அந்த மனிதரும் மறைந்துவிட்டார். படுகாயமுற்றிருந்த நண்பருக்குச் சில வினாடிகளில் பூரண சுகம் கிடைத்தது. மரணத்தருவாயிலிருந்தவர் முற்றிலும் குணமானார்.

தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக் காலத்தில் அநுகூலமான துணையுமானவர். — சங். 46:1

தண்ணீர் கொண்டுவந்த கரம்
(கதை எண் 8)

9. இயற்கையின் பிரதிபலிப்பு

திபேத் நாட்டில் என் நண்பனொருவன் கிறிஸ்துவுக்குச் சாட்சி கொடுத்துப் பிரசங்கித்துக் கொண்டிருந்தான்; இச் செய்கையினால் புத்தமத குருவின் பகையைச் சம்பாதித்துக் கொள்ளுவானென்று பலர் அவனை எச்சரித்தனர். 'நற்செய்தியைப் பிரசங்கிக்காமல் என்னால் சும்மா இருக்க முடியாது. கிறிஸ்து இயேசுவில் நான் கண்டதை பிறருக்கு அறிவித்தே தீரவேண்டும்' என்று விடையளித்தான் என் நண்பன். பகைவர் அவனை அவமதித்து அடித்து, கால்களைக் கயிறுகளால் கட்டி, ஒரு மரக்கிளையில் தலைகீழாகத் தொங்கவிட்டனர். தலைகீழாகத் தொங்குவது மிகுந்த சிரமத்தை அவனுக்குக் கொடுத்திருக்கும். அவனோ பூலோகத்தில் பரலோகத்தின் இன்பங்களை அனுபவிப்பதாகப் பகர்ந்தான். தன் மீட்பருக்காகத் துன்பப்படுவது சரியே என்றும் கூறினான். அதுமட்டுமல்ல, 'என்னைத் தலைகீழாகத் தொங்கச் செய்திருப்பது உங்கள் இயற்கையின் பிரதிபலிப்பே தவிர வேறல்ல. உலகமே தலைகீழாக இருப்பதால் உங்கள் செயலும் அவ்வாறே இருக்கிறது. தலைகீழான உலகத்தால் எதையும் நேராகக் காணமுடிவதில்லை. நேர்மையான செய்திகளும் உங்களுக்குப் புரிவதில்லை. திரைப்பட இயந்திரத்தில் பொருத்தப்படும் படத்துண்டுகள் தலைகீழாக இருந்தாலும் திரையில் நேராகத் தோன்றுவதுபோல் நான் சகலத்தையும் நேராகக் காண்கிறேன். உலக இயந்திரத்தில் தலைகீழாக இருந்தாலும் பரலோகத் திரையில் நேர் முறையிலிருப்பேன். இவ்வாறிருப்பதற்கு இறைவனுக்கு நன்றியும் செலுத்துகிறேன்' என்று கூறினான். இவ்வாறு கூறியவன் தான் மெய்யாகவே தேவனுடைய அரசுக்குள் இருப்பதைச் செயல்முறையில் நிரூபித்துவிட்டான்.

அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்.

— 2 தீமோ. 2:12

10. பாலும் வேதாகமமும்

சில ஆண்டுகளுக்கு முன் சிறந்த கல்விமான் ஒருவரிடம் பேசிக்கொண்டிருந்தேன். 'வேதாகமத்தைப்பற்றி அனைத்தையும் அறிந்துகொள்வது மிகவும் பயனுள்ளது. அதன் ஒவ்வொரு பாகத்தையும் அலசி ஆராயவேண்டும் என்று' அவர் சொன்னார். இதை விளக்குவதற்கு அவர் ஒரு கோப்பைப் பாலை எடுத்துக் கொண்டார். பாலில் சர்க்கரைப் பொருளும் புரதமும், ஏனைய சத்துக்களும் அடங்கியிருக்கிறதென்று அறிந்துகொள்வது நல்லது என்றார். ஆனால் நானோ ஒரு சிறுகுழந்தை அவரையும்விடப் புத்திசாலி என்று கூறினேன். பாலில் அடங்கியுள்ள சத்துப்பொருள்களை அது ஆராய்வதில்லை. ஆனால் அது பாலைச் சுவைத்துப் பருகி, அது ருசி மிகுந்தது என்று அறிந்திருக்கிறது. அதை அனுதினமும் அருந்தி நாளுக்குநாள் பலமடைகிறது. பாலில் அடங்கியுள்ளவை இவையிவை என்று அதற்குத் தெரியாது. ஆனால் பாலைப் பற்றிய முக்கியமான இரு செய்திகள் அதற்குத் தெரியும். பால் ருசி மிகுந்த பானமென்றும், அதைக் குடிப்பதன் மூலம் ஆரோக்கியம் பெறலாம் என்றும் அது அறிந்திருக்கிறது. பாலைப் பிரித்து ஆராய்வதால் பயனேதுமில்லை.

பாலை எடுத்துப் பருகும் குழந்தையைப்போல நாமிருக்க வேண்டும். ஆண்டவரின் வார்த்தையை அலசி ஆராயும் பல கிறிஸ்தவர்கள் உண்டு. அதன் பக்கங்களை நுணுக்கமாய் ஆராயும் அறிவாளிகளுமுண்டு. என்றாலும் ஆன்மீகப் பாலை அவர்கள் அருந்துவதில்லை.

தேவனுடைய வார்த்தையைக் கேட்டு அதைக் காத்துக் கொள்ளுகிறவர்களே அதிக பாக்கியவான்கள்.

— லூக்கா 11:28

11. எல்லாம் அவரே!

இமயமலையின்மீது பூச்சிகளால் நிறைந்ததொரு மரத்தைப் பார்த்தேன். முதலில் அவை எனக்குப் பூச்சிகளாகத்

தோன்றவில்லை. இலைகளின்மீது அவை தங்கியிருந்தபடியால் இலைகளாகவே தோன்றின. உற்று நோக்கிய பின்புதான் அவை இலைகளல்ல, பூச்சிகள் என்று தெரிந்தது. நிறத்திலும் உருவத்திலும் அவை இலைகளை ஒத்திருந்தன. பக்கத்துக் கிராமவாசி ஒருவன் இப்பூச்சிகளைப் பற்றி எனக்கு விளக்கினான். இவை மரத்தின்மீது உற்பத்தியாகின்றன. அந்த மரத்தையே புசித்து உயிர் வாழ்கின்றன. மரமே அவைகளுக்கு எல்லாமாக இருக்கிறது.

இயேசுவுடன் வாழ்பவர்களும் இவ்விதமே. அவர்கள் அவரைப் போலாகிவிடுகிறார்கள். அவர் மாமிசத்தைப் புசித்து, அவர் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறார்கள். அவர்களில் அவர் வாசம் பண்ணுகிறார். அவர்கள் அவரில் நிலைத்திருக்கிறார்கள். நாம் அவருடைய சாயலில் உருவாக்கப்பட்டவர்கள். அவர் நம்மில் வாழும்போது அவருடைய சொந்தச் சாயலில் நமது ஆவியும் உருவாக்கப்பட்டிருக்கிறது.

சிறு படகுகளையொத்தவர்கள் நாம். படகு தண்ணீரில் இருந்தால் பயன்படுமே தவிர, தண்ணீர் படகில் இருந்தால் அதனால் பயனில்லை. இதேவிதமாக நாம் இவ்வுலகில் வாழ வேண்டும், ஆனால் உலகம் நம்மில் வாழக்கூடாது. உலகம் நமக்குள் புகுந்துவிடும்போது நாம் உலகுள் மூழ்கிவிடுவோம். ஆகவே உலகமல்ல; கிறிஸ்து நமக்குள் வாழ இடம் கொடுப்போம்.

நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே

— 2 கொரி. 6:16

12. காந்தம்

ஒரு குன்றின்மீது சற்று இளைப்பாறுவதற்காக அமர்ந்திருந்தேன். அப்போது ஒரு பறவை மெதுவாகப் பறந்து செல்வதைக் கண்டேன். நான் அதைக் கவனித்துக்

கொண்டிருந்தபோது ஒரு பெரிய பாம்பு அப்பறவையைத் தன் காந்தக் கண்களால் கவர்ந்திழுப்பதைக் கண்டேன். பரிதாபத்திற் குரிய அச்சிறு பறவை தான் மரணத்தின் வாய்க்குள் இழுக்கப் படுவதை உணரவில்லை. அவ்வாறு உணர்ந்தாலும் அதை மேற்கொள்ளும் சக்தி அதற்கில்லை. அதைக் காப்பாற்ற நானும் முயற்சித்தேன். ஆனால் பயனில்லை. பாம்பின் வாய் அருகில் பறவை நெருங்கிய அக்கணமே அது விழுங்கப்பட்டு மடிந்தது. இதேபோல சாத்தானான கொடும் பாம்பு தன் காந்த சக்தியைக் கொண்டு கவர்ந்திழுக்கிறான். தீமையின் வலிமையை எதிர்க்கும் சக்தி நம்மில் எவருக்கும் இல்லை என்பது உண்மை. மரணத்தின் வாயருகில் சென்று கொண்டேயிருக்கிறோம். ஆனால் இயேசு கிறிஸ்துவை ஏறிட்டுப் பார்த்தால் அவர் நம்மைத் தம்மிடமாக இழுத்துக் கொள்வார். பரலோக இன்பத்திற்கு ஏற்றிச் செல்வார்.

எச்சரிக்கையாயிருங்கள், விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்.

— மாற்கு 13:33

விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்.

— கலா. 3:11

13. சேறும் மலரும்

இமயமலைப் பகுதிக்கருகில் மிக அசுத்தமானதொரு கிராமத்திற்குச் சென்றிருந்தேன். அந்தச் சூழ்நிலையின் துர்நாற்றம் என்னைப் பலமாகத் தாக்கியது. சில நாட்களுக்குப் பின் மீண்டும் அதே இடத்தை நான் கடந்தபோது அங்கு அற்புதமானதொரு மாறுதல் ஏற்பட்டிருந்தது. முன்பு போலவே அங்கு குப்பையும், சகதியுமாக மிக அசுத்தமாகத்தான் இருந்தது. அதில் மாற்றமேதும் இல்லை. ஆனால் அக் குப்பையின் மத்தியில் ஓர் அழகிய மலர்ச்செடி தோன்றி யிருந்தது. அம்மலரிலிருந்து வீசிய இனிய நறுமணம், துர் நாற்றத்தை அறவே போக்கடித்துவிட்டது. குப்பை அச் செடிக்கு

உரமாகப் பயன்பட்டதால் அது செழித்து வளர்ந்தது; மலர் சொரிந்தது. ஒன்றுக்கும் உதவாத குப்பையும், கூளமும் மலருக்கு உணவாகியிருந்தது. சூரியக் கதிர்கள் பூவின்மீது பட்டு அதற்குவேண்டிய வெப்பத்தைத் தந்து கொண்டிருந்தன. அங்கு குப்பையின் மத்தியிலும் ஆண்டவருடைய மகிமையைக் கண்டேன். உண்மைக் கிறிஸ்தவர் இவ்வுலகில் பூவைப் போன்றவர். சுற்றிலும் பாவச் சேற்றின் மத்தியில் வாழ்ந்தாலும் அவர்கள் முகமும், அகமும் நீதியின் சூரியனை நோக்கிக் கொண்டிருக்கிறது.

நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்.

— மத். 5:14

14. அதிசயம்; ஆனால் உண்மை

ஒரு சமயம் என் உறவினர் எனக்கு உணவில் விஷமிட்டுக் கொல்ல முயற்சித்தனர். அதைப் புசித்த நான் மரணத்தருவாயிலிருந்தேன். உயிர் பிழைக்கும் நம்பிக்கை யில்லை என்று மருத்துவர் கூறிவிட்டார். ஆனால் நான் கட்டாயம் பிழைத்து என் மீட்பருக்காகச் சாட்சி கொடுப்பேன் என்று நிச்சயித்திருந்தேன். விஷத்துக்கு மாற்று மருந்தாக எதையும் கொடுக்க அந்த வைத்தியர் மறுத்துவிட்டார். அவ்வாறு கொடுத்து அதன் பின் நான் மரித்துவிட்டால், தம்மீது கொலைக் குற்றம் சாட்டப்பட்டுவிடும் என்று அவர் பயந்ததுதான் காரணம். நான் மயக்கத்திலிருந்து சுயநினைவு பெற்றதும் அவ்வைத்தியரை மாற்கு 16–ஆம் அதிகாரத்தை வாசிக்கும்படி கூறினேன். பகுத்தறிவுவாதிகளைப்போல அவர் உயிர்த் தெழுதலைப்பற்றி வாசித்துவிட்டுச் சிரிக்க ஆரம்பித்தார். அற்புதங்களை அனுபவித்திராதவர்களுக்கு அவற்றைப் புரிந்து கொள்ளும் சக்தியில்லை. காலையில் நான் தெம்படைந்து உயிர் பெற்றேன். அந்த மருத்துவர் மீண்டும் வந்தபோது நான் வெளியே வெயிலில் உட்கார்ந்திருந்தது கண்டு பேராச்சரிய முற்றார். அத்துடன் அவமானமடைந்து ஒரு வார்த்தையும்

அற்புத சுகம் பெற்றார்!
(கதை எண் 14)

பேசாமல் அங்கிருந்து போய்விட்டார். பல காலமாக நான் அவரைக் காணவில்லை.

சில வருடங்கள் கழித்து நான் பர்மாீவுக்குச் சென்றிருந்த போது அவரை ஒரு பொதுக் கூட்டத்தில் சந்தித்தேன். 'என்னை அடையாளம் தெரிகிறதா?' என்று அவர் கேட்டார். 'ஆம், உம்மைப் போன தடவை நான் பார்த்தபோது மரணப் படுக்கையிலிருந்தேன்' என்று விடையளித்தேன். நான் அற்புதமாக உயிர் பிழைத்தது அவருக்கு ஆச்சரியத்தைக் கொடுத்ததாகவும், அதிலிருந்து வேதாகமத்தை வாசித்துக் கிறிஸ்தவனாக மாறியதாகவும் அவர் கூறினார். இப்போது கிறிஸ்துவின் பணியாளனாகத் தொண்டாற்றுகிறார் அவர்.

அதிசயங்களைச் செய்கிற தேவன் நீரே.

— சங். 77:14

15. ஆணிச் சாமியார்

ஹரித்துவாரத்தில் சில காலத்துக்கு முன் நானொரு காட்சியைக் கண்டேன். சந்நியாசியொருவர் ஆணிகளாலாகிய படுக்கையில் படுத்திருந்தார். இவ்வாறு தமது உடலைச் சித்திரவதை செய்து, தம்மைத் தாமே வதைத்துத் துன்புறுத்துவதன் நோக்கம் என்னவென்று அவரையணுகிக் கேட்டேன். அவரோ என்னைக் கண்டு, 'நீ ஒரு சந்நியாசியாய் இருந்தும்கூட உனக்குத் தெரியாதா?' என்று கேட்டார். 'கூராணிகளால் தேகத்தை குத்தி வேதனையனுபவிப்பது கடுந்தவத்தின் அடையாளம். இவ்விதமாகக் கடவுளைத் தொழுகிறேன். ஆனால், இந்த ஆணிகளால் நான் அனுபவிக்கும் துன்பம், என் பாவங்களிலிருந்தும் அக்கிரமங் களிலிருந்தும் எனக்குக் கிடைக்கும் துன்பத்தைப் போலக் கொடியதல்ல. சுய விருப்பத்தை அடக்கி ஒடுக்குவதன் மூலம் இரட்சிப்பைப் பெறுவது என் குறிக்கோள்' என்றார். அவர் எத்தனை காலமாக இதைச் செய்து வருகிறார் என்றும், எதுவரைக்கும் தமது இலட்சியத்தை அடைந்திருக்கிறார் என்றும்

கேட்டேன். பதினெட்டு மாதங்களுக்கு முன்னால் இக்கடுந் தவத்தைத் தான் ஆரம்பித்ததாகவும், இதுவரை தமது இலட்சியத்தை அடையவில்லை என்றும், இக் குறுகிய கால அளவுக்குள் அதை அடைய முடியாதென்றும் விடையளித்தார். 'என் இலட்சியம் நிறைவேற பல வருடங்கள் — ஏன், பல பிறப்புகள் தேவையாக இருக்கும்' என்றார்.

என் சொந்த முயற்சிகளால் இரட்சிப்பைப் பெற முயன்று நான் அடைந்த தோல்வியின் அனுபவத்தைக் கூறினேன். எவ்வாறு ஒரே கணத்தில் என் ஆண்டவர் இயேசு என் மனதை மாற்றி, அமைதியற்ற என் ஆன்மாவுக்கு சாந்தியையும் சமாதானத்தையும் அருளினார் என்றும் அறிவித்தேன்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்.

— அப். 16:31

16. தலைகீழ் சாமியார்

கால்கள் கயிற்றினால் பிணைக்கப்பட்டவராய் ஒரு மரத்தின் கிளையொன்றில் தலைகீழாகத் தொங்கிக் கொண்டிருந்தார் ஒரு சாமியார். சிறிது நேரம் கழித்து அவர் கட்டவிழ்க்கப்பட்டு இளைப்பாறிய பிறகு அவரைக் காணத் திரும்பி வந்தேன். தலைகீழ்த் தவம் புரிவதன் காரணமென்ன? இதனால் கிடைக்கும் இலாபமென்னவென்று அவரை வினவினேன். 'நீயும் என்னைப்போல ஒரு துறவியாதலால் என் கருத்தை சுருக்கமாக விளக்குகிறேன். சர்வ சிருஷ்டிகரான இறைவனே மனுக்குலமனைத்தையும் தாயின் கர்ப்பத்தில் தலைகீழாகத் தங்கும்படி நியமித்திருக்கையில் நான் இவ்வாறு தொங்குவதைக் குறித்து மக்கள் ஏன் அதிசயிக்க வேண்டும்? என்னுடைய தவம் அவர்கள் கண்ணுக்கு விசித்திரமாகப் படலாம். ஆனால், நாம் பாவத்தில் சிக்கிக் கொள்ளும்போது இறைவனின் பார்வையால் தலைகீழாக மாறியிருக்கிறோம் என்பதை எனக்கும், மற்றவர்களுக்கும் நினைவூட்டுவதற்

காகவே நான் இவ்வாறு செய்கிறேன்' என்றார் அவர். மேலும், 'இதன் மூலம் வெளிப்புறத்திலும், உள்ளரங்கத்திலும் நான் என்னையே சீர்திருத்திக்கொள்ள முயலுகிறேன். கடவுளின் கண்களுக்கு நான் நேரான வகையில் காணப்படுகிறேன் என்ற உணர்வை அடையும் வரை இவ்விதம் தொடர்ந்து செய்வேன்' என்றும் கூறினார்.

வினோதமான கருத்து இது. உலகம் தலைகீழாக இருப்பது உண்மை. அதன் வழிகளும் தலைகீழானவைகளென்பதும் உண்மை. ஆனால், அந்தத் தலைகீழ் வழியை நாமும் பின்பற்றக்கூடாது. பாவத்தின் தளைகளினின்று நம்மை நாமே நம் சொந்த முயற்சியால் சிக்கவிழ்த்துக் கொள்வது சாத்தியமானதல்ல. நமது சக்திக்கு அப்பாற்பட்ட காரியம் அது. ஆகையினால்தான் அன்புருவான ஆண்டவர் மானிடனாக அவதரித்தார். பாவத்தின் கட்டுக்களின்றும் நம்மை விடுதலையாக்கவும், தலைகீழான வையகத்தை நேராக இயங்கச் செய்யவும் நம்மிடையே தோன்றினார். இவ்வாறு மீட்கப்பட்டிருக்கும் நம்மைத் தம் கருவிகளாக உபயோகிக்கிறார் என்று நான் அவருக்கு விளக்கினேன்.

நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலி அவரே.

— 1 யோவான் 2:2

17. ஒற்றைக்கைச் சாமியார்

கங்கைக்கரையில் அமர்ந்திருந்த ஒரு முனிவரைச் சுற்றிப் பெருங்கூட்டம் சூழ்ந்திருந்தது. தன் தலைக்கு மேலாக ஒரு கரத்தை உயர்த்தியிருந்த இவரைத் தூரத்திலிருந்து கண்டதும் மக்களுக்கு இவர் ஆசிவழங்கிக் கொண்டிருப்பதாக முதலில் நினைத்தேன். சமீபமாக வந்தபோதோ, அதைத் தாழ்த்த முடியாதபடி அவர் கரத்தின் எலும்புகள் நிலைத்து நின்றிருப்பதைக் கண்டேன். ஜனங்களுடன் அவர் உரையாடி

முடித்ததும் அவர் கரம் எப்படி இவ்வாறாயிற்று என்று அவரைக் கேட்டேன். 'ஐயா, இந்தக் கையினால் திருடியிருக்கிறேன், பிறரை அடித்துத் துன்புறுத்தியிருக்கிறேன், பல பாவங்களைப் புரிந்திருக்கிறேன். ஆனால், என் வாழ்க்கையின் அடித்தளம் முற்றும் ஆட்டம் காணும் அதிர்ச்சியை நானடைந்த நாள் ஒன்று வந்தது. என் பழைய வாழ்க்கையை முற்றிலும் துறந்த நான், இக் கையைத் துண்டிக்க எண்ணினேன். அல்லது அதற்குத் தக்க தண்டனையே அளிக்கும் வகையில் அதை உபயோக மற்றதாகச் செய்ய எண்ணினேன். என் குருநாதரைக் கலந் தாலோசித்து அவர் அறிவுரையின்பேரில் இப்பாவக் கரத்தை என் தலைக்கு மேலாக இடைவிடாமல் உயர்த்தியிருக்க கற்றுக் கொண்டேன். அதன் விளைவாக அது இவ்வாறு உலர்ந்து உதவாததாக அப்படியே நிலைத்துவிட்டது. என் கையைக் குறித்து இப்போது எனக்கு மிகப் பெருமையுண்டு' என்றார் அச்சாமியார்.

அவருடைய தீரத்தையும், நல்லெண்ணத்தையும் கண்டு மெச்சிய நான், இறைவனால் அளிக்கப்பட்ட கரத்தை அவர் இவ்வாறு பாழாக்கிவிட்டாரே என்று வருந்தினேன். 'உமது கையை ஒன்றுக்கும் உதவாததாக அழித்துக் கொண்டிராமல், அதை மற்றவர்களுக்கு உதவும் பணியில் உபயோகித்திருக்க வேண்டும். அதனால் முன்பு ஏற்பட்ட நஷ்டத்திற்கு நீர் இவ்வாறு ஓரளவு ஈடு செய்திருக்கலாம். உம்முடைய கையை வீணாக அழிப்பதில் அல்ல; அதை மற்றவர்களுக்கு உதவும் வகையில் பயன்படுத்துவதில்தான் உண்மை வெற்றியும் வீரமும் அடங்கி யிருக்கிறது. "உன் வலதுகை உனக்கு இடறலுண்டாக்கினால் அதைத் தறித்து எறிந்து போடு" என்று என் குருநாதரும் போதித்திருக்கிறார். இனி வருங்காலத்தில் அது ஒருபோதும் தீச்செயலுக்கு உபயோகப்படாதபடி, தீமையைச் செய்யும் அக் கருவியை நம் இருதயங்களிலிருந்து வெட்டி எறிய வேண்டும் என்பதுதான் இதன் பொருளே தவிர வேறல்ல' என்று விளக்கிக் கூறினேன்.

நீ கர்த்தருடைய பார்வைக்குச் செம்மையும் நன்மையுமாய் இருக்கிறதைச் செய்வாயாக.

— உபாகமம் 6:19

18. மௌனச் சாமியார்

பல ஆண்டுகளாக மௌன விரதத்தைக் கடைப்பிடிக்கும் சாமியார் ஒருவரைச் சந்தித்தேன். கடந்த ஆறு ஆண்டுகளாக ஒரு வார்த்தைகூட அவர் பேசவில்லையாம். நான் அவரைக் கேட்ட கேள்விகளுக்குரிய பதிலை, அவர் எழுதிக் காட்டினார்.

'கடவுள் அருளிய வரத்தை உபயோகிக்காமல் நீர் வீணாக்குவது ஏன்? தம்மைப் பற்றிப் பேசவும், தன் புகழ் பாடவும், தம்மைத் துதித்து வணங்கவும், தம்மைக் குறித்து வேத விசாரணை செய்யவும் ஆண்டவர் உமக்கு நாவன்மை அளித்திருக்கிறார். நீர் மௌனமாயிருக்க வேண்டுமென்று அவர் கருதியிருந்தால் உம்மை ஊமையாகப் படைத்திருக்க லாமே?' என்று அவரைக் கேட்டேன்.

பெருமைக்குரிய உணர்வு சிறிதுமின்றி அவர் தம் பதிலை எழுதினார். 'நீர் சொல்வது மிகவும் சரி. ஆனால், என் வாயிலிருந்து வரும் எந்த வார்த்தையும் பயனற்றுப் போகுமளவுக்கு என் முன்கோபம் மிகக் கொடியது. இந்த நாவினால் பொய்யுரைத்தேன். பிறரை ஏசினேன். பழித்துப் புறங் கூறினேன். நான் இறுதியாகப் பேசி ஆறு வருடங்கள் ஆகின்றது. ஆனால் மன அமைதியின் இலட்சியத்தை நான் இன்னமும் அடையவில்லை. நன்மொழிகளைப் புகல முடியா விட்டால் நாவைக் கட்டிப் போட்டு மௌனமாயிருப்பதே உத்தமம். இதுவரை எந்த நன்மையும் எனக்குக் கிடைக்க வில்லை. என்னால் மக்களுக்கு நற்போதனை எதுவும் அளிக்க முடியவில்லை. ஆகையால் மௌனியாயிருப்பதே எனக்கு ஏற்றது' என்று எழுதிக்காட்டினார். அவருடன் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு நற்செய்தி நூலின் ஒரு பிரதியை

அவருக்குக் கொடுத்தேன். நன்றியுடன் அதை வாங்கிக் கொண்ட அவர், கவனமாய் வாசிப்பதாக வாக்களித்தார்.

ஆரோக்கியமுள்ள நாவு ஜீவ விருட்சம்.

— நீதி. 15:4

19. இருட்டறைச் சாமியார்

திபேத் நாட்டின் மலைக்குகையொன்றில் லாமா ஒருவர் பல ஆண்டு காலமாகப் பிரார்த்தனையிலும், தியானத்திலும் ஆழ்ந்திருந்தார். தமது குகை வாயிலை அடைக்கச் செய்த பின் அவர் அதைவிட்டு ஒரு நாளும் வெளியேறியதேயில்லை. பக்கத்திலிருந்த மக்கள் அவருக்குத் தேனீரும், உலர்ந்த பார்லி மாவும் தினமும் ஒருமுறை கொண்டு செல்வது வழக்கம். குகைச் சுவரில் இருந்த துவாரத்தில் அதை அவருக்கென்று வைத்து விடுவார்கள். இவ்வாறே தன் வாழ்வின் எஞ்சிய காலத்தையும் அக்குகையில் கழிக்கத் திட்டமிட்டிருந்தார்.

அவரைப்பற்றிய விவரங்களைத் தெரிவித்த ஒருவரை அழைத்துக்கொண்டு அத்துறவியைக் காணச் சென்றேன். அவர் தியானத்திலும், ஜெபத்திலும் தரித்திருந்தபடியால் நாங்கள் சிறிது நேரம் காத்திருக்க வேண்டியதாயிற்று. அதன் பிறகு அவர் எங்கள் வேண்டுகோளுக்கு இணங்கி குகைச் சுவரின் துவாரத்துக்கருகில் வந்து அமர்ந்தார். அந்தக் குறுகிய இருட்டுச் சந்தில் அவரை எங்களால் காண முடியவில்லை. அவராலும் எங்களைப் பார்க்க முடியவில்லை. எனினும், நாங்கள் சுலபமாகப் பேசிக் கொள்ள முடிந்தது. நான் எங்கிருந்து எதற்காக வந்திருக்கிறேன் என்று அவர் என்னை முதலில் வினவினார். பின் அவருடைய அனுபவத்தைப் பற்றிக் கேட்டேன். 'இத்தகைய தனிமைத் தவத்தினால் உங்களுக்குக் கிடைத்ததென்ன ? கடவுளைப்பற்றி புத்தர் ஏதும் போதித்திருக்க வில்லையே. அப்படியானால் நீர் யாரிடம் வேண்டுதல் செய்கிறீர் ?' என்று வினவினேன்.

'நான் புத்தரை கடவுளாக எண்ணி அவரிடம் பிரார்த்தனை செய்கிறேன். யாதொன்றையும் பெற எண்ணி நான் இந்தக் குகையில் மறைந்திருக்கவில்லை. எதையும் அடைய வேண்டுமென்பதும் என் இலட்சியமல்ல. ஆசையை விட்டொழித்து நிர்வாண நிலையை மட்டுமே முயற்சிக்கிறேன். சகல உணர்ச்சிகளினின்றும், ஆசைகளினின்றும் விடுபட்டு இன்பத்தினாலும், துன்பத்தினாலும் பாதிக்கப்படாத சூன்ய நிலையைப் பெற ஏங்குகிறேன். ஆயினும், சரீரப் பிரகாரமாக இருப்பது போலவே என் ஆன்மாவிலும் அந்தகாரம் நிறைந்துள்ளது. இதன் முடிவு எத்தகையதாயிருக்குமென்று நானறியேன். ஆனால், இப்பிறவியில் நிவிர்த்தியாக்கப்படும் என்று மட்டும் எனக்குத் தெரியும்' என்று பதிலளித்தார் அவர்.

'உமக்குள்ள ஆசைகளும் உணர்ச்சிகளும் உமக்குக் கடவுளால் கொடுக்கப்பட்டவை. அவை நசுக்கப்பட்டு அழிந்தொழிய வேண்டும் என்பது அவர் சித்தமல்ல. தம்மில் அவை திருப்தியுறுவதற்காகவே அவற்றை நமக்குத் தந்திருக்கிறார். ஆசாபாசங்கள் அழிவுற வேண்டுவது அவர் சித்தமாக இருந்திருந்தால் அவற்றைப் படைத்திருக்கவே மாட்டார். இந்த ஆசைகளைக் கொல்ல முயற்சிப்பது மீட்புக் கல்ல, தற்கொலைக்கே வழிகாட்டும். ஏனெனில் அவை நம் வாழ்க்கையுடன் பிரிக்கமுடியாதபடி பிணைக்கப்பட்டுள்ளன. இந்த ஆர்வங்களை அடக்குவதற்குப் பதில் அவற்றைப் படைத்த தேவனில் அவை திருப்தியுறச் செய்வதே மிகச்சிறந்த மார்க்கம். இவ்வாறு செய்வோமானால் நாம் மீட்படைவது நிச்சயம்' என்று கூறி முடித்துக் கொண்டேன்.

நன்மை செய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக.

— கலா. 6:9

20. சீன மருத்துவர்

பீகிங் நகரத்தில் ஒருநாள் அருளுரையாற்றிக் கொண்டிருந்தேன். கூட்டத்தின் முடிவில் சீன மருத்துவர் ஒருவர்

என்னிடம் வந்து, 'கிறிஸ்து சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்தான் பிறந்தார். ஆனால், அதற்கு வெகு காலத்திற்கு முன்பே எங்கள் நாட்டில் கன்பூசியஸ் போன்ற பெரும் ஞானிகள் இருந்திருக்கிறார்கள். இவர்களுடைய போதனைகள் எங்களுக்குப் போதுமானவை' என்றார்.

'கிறிஸ்து இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்தான் வந்தார் என்று நீர் சொல்வது தவறு. அவரது அவதாரத்துக்கு வெகு காலத்துக்கு முன்பே அவர் உலகில் இருந்தார். உலகம் அவரை அறிந்து கொள்ளவில்லை. ஆனால் அவரை அறிந்தவர்களோ கிருபை பெற்றார்கள். கன்பூசியசையும் அவர் போதனைகளையும் நான் குறைகூறவில்லை. ஆனால் அப்போதனைகளினாலும், அவர் முன்மாதிரியினாலும் சீனா எவ்வகையில் முன்னேறியிருக்கிறதென்பதை நீர் எனக்குச் சொல்ல வேண்டும். குறிப்பாக இதனால் நீர் அடைந்துள்ள பயனென்ன?' என்று அவரிடம் கேட்டேன்.

'உணவை விழுங்கியவுடனே விளைவு தெரியாது. இப்போதனைகளும் அதைப் போன்றதே. மெதுவாகத்தான் விளைவுகள் வெளிப்படும்' என்றார் அவர்.

'உணவை நாம் உட்கொண்டவுடனே அது ஜீரணிப்பதில்லை; நம் உடலுடன் கலப்பதில்லை என்பது உண்மைதான். ஆனால், நாவின் மூலம் உட்கொள்ளும்போதே உணவின் ருசியை அனுபவித்துணருகிறோம். வெறும் தத்துவத்தால் பயனில்லை. கிறிஸ்துவின் போதகமோ ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது. அவரை ஏற்றுக் கொண்டிருக்கும் கோடானு கோடி மக்கள் அவரால் புதுவாழ்வைப் பெற்றிருக்கிறார்கள்' என்று நான் கூறியபோது அச்சீனர் —

'இப்புது வாழ்வையும் மாற்றத்தையும் நாம் வெளியிலிருந்து பெற முடியாது. அது நம் சொந்த முயற்சிகளை மட்டுமே சார்ந்திருக்கிறது' என்றார்.

'கடவுளை ஏற்றுக் கொள்வதன் செய்கை நம்மைச் சார்ந்தது என்பது உண்மைதான். ஆனால், நாம் நமது சொந்த முயற்சிகளால் புதுவாழ்வைப் பெறுவது சாத்தியமல்ல. கசப்புள்ள மரம் தன்னில் தானாக இனிப்பாக மாற முடியாது. ஆனால், இனிய கனிமரத்துடன் ஒட்டுச்சேர்வதன் மூலம் அது இனிமையைப் பெறலாம். அதேபோல, பாவியான மனிதன் விசுவாசத்தின் மூலம் கிறிஸ்துவுடன் ஒட்டுச் சேரலாம். கிறிஸ்துவின் ஜீவன் அவனுக்குள் பாய்ந்து அவனைப் புது மனிதனாக மாற்றும்' என்று அவரிடம் விளக்கினேன்.

ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின.

— 2 கொரி. 5:17

21. இரத்தப் பழி

எருசலேமில் ஒரு யூதப் போதகரைச் சந்தித்தேன். கிறிஸ்துவைப் பற்றி அவரது அபிப்பிராயம் இன்னதென்றும் வாக்குறுதியளிக்கப்பட்ட நாட்டின் எதிர்காலம் பற்றியும் கேட்டேன்.

'மேசியாவின் வருகைக்காகவும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட எங்கள் நாட்டின் மீட்புக்காகவும் நான் காத்திருக்கிறேன். ஆனால், என் எதிர்பார்ப்பும், ஏக்கமும் இவ்வுலக வாழ்வில் நிறைவுபெறுமா, மறுவுலகத்தில் நிறைவேறுமா என்பது எனக்குத் தெரியாது. மேலும் இதே நகரத்தில் சிலுவையிலறையுண்ட இயேசுதான் மேசியாவா அல்லது வேறொருவர் வர வேண்டியதிருக்கிறதா என்றும் நான் திட்டவட்டமாகச் சொல்ல முடியாது. ஆனால், இயேசு ஒரு மகான் என்பதை நான் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். அவரிடம் என் தேசத்தார் அதி கொடூரமாக நடந்து கொண்டார்கள். அவரைக் கொன்ற பாவத்துக்காகவும், அக் கொடுமைக்குப் பிரதிபலனாகவும் நாங்கள் இந்நாள் வரையிலும் தண்டனை அனுபவித்துத்

துன்புறுகிறோம். அவரது இரத்தப்பழி எங்கள் தலைமேல் இருக்கிறது' என்றார் அவர்.

இயேசுவே மெய்யான மீட்பர் என்பதை அவர் அறிந்து கொள்ளவில்லை!

எங்களைத் தேவனுக்கென்று உம்முடைய இரத்தத் தினாலே மீட்டுக் கொண்டீர்.

— வெளி. 5:9

22. இரகசிய உதவி

செல்வந்தனாக இருந்த ஒருவன் திடீரென்று வறிய நிலையை அடைந்து பட்டினியால் வாட நேர்ந்தது. தன்னுடைய வறுமையைப் பிறருக்கு எடுத்துக்கூறி பிச்சைபெற அவனுடைய மனநிலை இடங் கொடுக்கவில்லை. இறைவன் ஒருவரிடமே அவன் கெஞ்சிக் கதறி உதவி கோரினான். அவனது ஜெபத்துக்கு வெகுசீக்கிரமே பதில் கிடைத்தது. அந்நிய நாட்டிலிருந்து சமீபத்தில்தான் திரும்பி வந்திருந்த வியாபாரி ஒருவர் அவனுடைய இக்கட்டான நிலையைக் கேள்வியுற்று இரவு நேரத்தில் இரகசியமாக அவனுக்கு வேண்டிய பொருட்களை அனுப்பிவைத்தார். தன் வேண்டுதலுக்குக் கைமேல் பலன் கிடைத்தவுடன் மனம் நிறைந்து பொங்கி இறைவனைத் துதித்தான் அப்பக்தன். அந்த வியாபாரி அவனுக்கு வேண்டிய நிதியுதவியைச் செய்வதற்குத் தயாளமுடன் முன்வந்தார். இதன் காரணமாக அவன் வீட்டுக்கு வந்ததும், நன்றியால் உளம்பூரித்தவனாக அவர் பாதங்களை முத்தமிட்டான்; அப்போதுதான் அப்பொருந்தகையோன் யாரென்பது அவனுக்குத் தெரியவந்தது. அவர் வேறு யாருமல்ல; வெகு காலத்துக்கு முன்பே அயல் நாட்டில் மரித்து விட்டதாகக் கருதப்பட்ட அவனுடைய சொந்தச் சகோதரனே அவர்.

இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.

— மத்தேயு 5:7

ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருங்கள்.

— எபேசியர் 4:32

23. கங்கைக் கரையில்

கங்கை நதிக்கரையின் கிராமமொன்றில் அருளுரை யாற்றச் சென்றிருந்தேன். ஒரு பண்டிதர் என்னருகில் வந்து 'நீராட வந்தீரோ?' என்று கேட்டார். 'கிறிஸ்துவின் தூய இரத்தத்தில் விசுவாசத்தினால் ஏற்கெனவே முழுக்காடி விட்டவன் நான். என் மீட்பரைப்பற்றி இங்குள்ளோருக்கு எடுத்துக்கூறவே வந்துள்ளேன்' என்றேன். இதைக் கேட்டதும் வியப்புற்று, இன் முகத்துடன் என்னை இறுகத் தழுவி 'ஐயனே, இதற்காகவே நானும் வந்திருக்கிறேன்' என்று அவர் கூறியபோது பெரிதும் வியப்புற்றேன். இதைப் பார்த்த அநேகர் எங்களை நெருங்கி வந்தனர். நாங்களிருவரும் நற்செய்தியை அவர்களுக்குக் கூற, அவர்கள் கவனமாய்க் கேட்டனர்.

அப்போது அவர்களில் ஒருவர் 'கிறிஸ்து என்பவர் கிருஷ்ணனுக்கோ அல்லது வேறொரு தெய்வத்துக்கோ சமமான அவதார மனிதனா?' என்று கேட்டார். அதற்கு அப்பண்டிதர் சமஸ்கிருத சுலோகங்கள் சிலவற்றை உச்சரித்தவாறு 'நாங்கள் கிருஷ்ணனைப்பற்றிப் பிரசங்கிக்கவில்லை. கிறிஸ்துவை, பாவமே புரிந்திராத பரிசுத்த அவதாரனை, சாஸ்திரங்களில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டுள்ள புண்ணிய கர்த்தனை அறிக்கையிடுகிறோம். கிருஷ்ணன் பாவிகளை இரட்சிக்க வரவில்லை; துன்மார்க்கனை அழிக்க வந்தான். ஆனால், கிறிஸ்துவோ பாவிகளை மீட்கும் பரம நேசனாக வந்தார்' என்று பகர்ந்தார்.

அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்.

— மத்தேயு 1:21

24. அண்ணனும் தம்பியும்

கிறிஸ்துவைத் தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட ஒரு நண்பரின் அனுபவம் இது. அந் நண்பர் தன் சகோதரனிடம் சென்று, 'நசரேயனாகிய இயேசுவைக் கண்டறிந்தேன். பாவத்திலிருந்து அவர் எனக்கு மீட்பைத் தந்து பல வருடங்களாக நான் தேடிக் கொண்டிருந்த மன அமைதியை எனக்கு அருளியிருக்கிறார்' என்று கூறினார். இதைக் கேட்ட அச்சகோதரன், 'நீயும் உன் அமைதியும் நாசமாய்ப் போக! புராதனமான மதத்தைக் கைவிட்டு பொய்யும், புரட்டும் நிறைந்த கிறிஸ்தவருடன் சேர விரும்புகிறாய். இதைவிட நீ பாழ் கிணற்றில் மூழ்கிப் போனால் நலமாயிருக்கும். உன்னை நல்வழியில் திருப்ப ஈஸ்வரனைக் கெஞ்சுகிறேன். அல்லது உன்னைக் குருடனாக்கித் தண்டிப்பதன் மூலம் உண்மையை நீ உணரச் செய்ய அவரை வேண்டுகிறேன்' என்று கொதித்தெழுந்தான்.

அப்போது நண்பர் அவனிடம், 'நீ நன்கு ஆராய்ந்து பார்த்தால் எந்த மதம் உண்மையானது, எது போலியானது என்று உனக்குப் புலப்படும். நான் குருடனாக வேண்டுமென்று நீ கடவுளைப் பிரார்த்தித்தாய். நானோ, அன்புருவான ஆண்டவன், நீ அவரைப் பார்ப்பதற்கும், அறிகிறதற்குமாக உன் கண்களைத் திறக்கும்படி வேண்டிக் கொள்கிறேன்' என்று கூறினார். அதைக் கேட்டதும் அவன் சாந்தமுற்றான். அதன்பின் பல நாட்கள் இருவரும் இது குறித்து விவாதித்து வந்தனர். கொஞ்சம் கொஞ்சமாக அச்சகோதரன் வேதாகமத்தை வாசிக்க ஆரம்பித்தான். ஆண்டவரின் ஆவி அவனுள் கிரியை செய்ய ஆரம்பித்தது. தேவன் நண்பரின் ஜெபத்தைக் கேட்டு அச்சகோதரனின் கண்களைத் திறந்தார். இப்போது சரீரப் பிரகாரமாக மட்டுமல்ல, ஆத்மீக உறவின்படியும் இருவரும் சகோதரர்களாக விளங்குகின்றனர்.

உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்.

— மத்தேயு 5:44

25. சீக்கியச் சீடர்

சீக்கியர்களே பெரும்பான்மையோராக வாழும் ஒரு கிராமத்திற்கு அருளுரையாற்றச் சென்றிருந்தேன். அவர்கள் கடுங்கோபத்துடன் என்னை எதிர்த்துக் கற்களை என்மீது எறிந்தார்கள். அனைத்தையும் கூர்ந்து கவனித்தவண்ணம் அங்கு ஒருவர் அமர்ந்திருந்தார். அவர் எழுந்து தாக்குதலினின்றும் என்னைத் தப்புவித்தார். அந்தஸ்தும், கௌரவமும் மிக்க நிலச்சுவான்தார் அவர் என்று பின்னர் தெரிந்து கொண்டேன். கூட்டம் கலைந்தபோது என்னைத் தம் இல்லத்திற்கு அழைத்துச் சென்று தன் மனத்தின் எண்ணத்தைக் கூறினார்.

'சில ஆண்டுகளுக்கு முன் ஒரு விற்பனைக் காட்சிக்குச் சென்றிருந்தேன். அங்கே சன்மார்க்க நூல்கள் சிலவற்றை ஒரு மனிதர் விற்றுக் கொண்டிருந்தார். கிறிஸ்தவ சுவிசேஷங்களி லொன்றை நான் எடுத்துப் பார்த்தபோது ஆரிய சமாஜத்தைச் சேர்ந்த ஒருவர் என்னையும், மற்றவர்களையும் அப் புத்தகத்தை வாங்க வேண்டாமென்று தடுத்தார். ஆனால் அவ்வழியே சென்று கொண்டிருந்த ஒரு சாது எங்களிடம் "குறுகிய மனப்பான்மையினராக இருக்க வேண்டாம். இந்த நூல்களை வாசிப்பது குறித்து பயப்படவும் வேண்டாம்" என்று கூறினார். மேலும் "இதை வாசிப்பதினால் யாருடைய வாழ்க்கைக்கும் எவ்விதக் கேடும் வந்துவிடாது. அநேகர் இவற்றால் பயனடைந் திருப்பதைக் கண்டிருக்கிறேன். ஏன், நானே வாசித்தும் வருகிறேன். இதைப் பின்பற்றுவோர்கள் பாவத்திலிருந்து விடுவிக்கப்பட்டு வெற்றி வீரராய்த் திகழ்கிறார்கள்" என்றார்.

'இவதக்கேட்ட நான் ஒரு நூலை வாங்கிக் கொண்டு வந்து நாள்தோறும் வாசிக்கலானேன். இதன் பயனாக என் வாழ்க்கையே மாறிவிட்டது. இப்போது கிறிஸ்து ஒருவரே என் மீட்பர், உலக இரட்சகர் என்று எனக்கு நிச்சயமாய்த் தெரியும். முன்பு ஒருபோதும் எனக்குக் கிடைத்திராத பூரண சாந்தி

என்னுள்ளத்தில் இப்போது நிலவுகிறது' என்று கூறினார் அச் சீக்கிய நண்பர்.

சிலர் இரதங்களைக் குறித்தும், சிலர் குதிரைகளைக் குறித்தும் மேன்மை பாராட்டுகிறார்கள்; நாங்களோ எங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைக் குறித்தே மேன்மை பாராட்டுவோம்.

— சங். 20:7

இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்.

— 1 யோவான் 1:7

26. தாகம்

ஐரோப்பாவில் ஒரு பெரிய பணக்காரரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவர் வேதாந்த நூல்கள் பலவற்றில் தேர்ந்திருந்தார். ஆனால், அவருடைய பணமோ கல்வியோ அவருக்கு மன அமைதியை அளிக்கவில்லை. அவரை நான் சந்திப்பதற்குச் சில காலத்துக்கு முன்னால் அவர் பல நாடுகளில் சுற்றுப்பயணம் செய்து தன் வாழ்க்கையின் எஞ்சிய நாட்களை சமாதானத்துடன் கழிக்கத்தக்க ஓரிடத்தைத் தேடினாராம். அவ்வாறு அவர் தேடிய இடம் மிகுந்த வெப்பமுடையதாகவோ, கடுமையான குளிருள்ளதாகவோ இருக்கக்கூடாதென்பது அவர் கருத்து. அங்கே கொள்ளை நோய்களோ, விஷப் பூச்சிகளோ இருக்கக்கூடாதென்பது மற்றொரு நிபந்தனை. அவ்விடத்து மக்களின் சமூக, ஒழுக்கநிலை விரும்பத்தக்கதாக இருக்க வேண்டுமென்றும் விரும்பினார். இத்தகையதொரு இடத்தைக் கண்டுபிடித்து விட்டால், அங்கு தம் வாழ்நாட்களை அமைதியுடனே கழித்து விடலாம் என்று திட்டமிட்டிருந்தார். ஆனால், கிறிஸ்துவுட னில்லாத இந்தக் கிறிஸ்தவர் நோவாவின் புறாவைப் போல பூமியின் எவ்விடத்திலும் இளைப்பாற முடியாமல் மனம் சலித்தவராய் சுவிட்சர்லாந்துக்குத் திரும்பினார். என்னிடம்

அவர் பேசிக் கொண்டிருக்கும்போது, 'வாழ்க்கையின் கஷ்டங்களிலிருந்தும், கவலைகளிலிருந்தும், விடுபடுவதற்காக நான் உலகத்தைச் சுற்றிவந்தேன். இந்தியாவிலிருந்து நீர் இங்கு வந்துள்ளதன் நோக்கமென்ன?' என்று என்னிடம் கேட்டார்.

'உலகத்தில் எதுவும், எந்த இடமும் உமக்கோ அல்லது வேறொருவருக்கோ அந்தரங்க தாகத்திலிருந்து விடுதலை தந்து சமாதானம் அளிக்க முடியாது. ஏனென்றால் அந்த தாகம் சரீரப் பிரகாரமானதல்ல, ஆன்மாவுடன் சம்பந்தப்பட்டது. ஆன்மாவையும், அதன் தாகத்தையும் படைத்த அந்த ஆண்டவர் ஒருவரில் மட்டுமே அது திருப்தியடைய முடியும்' என்று பதில் கூறினேன்.

கர்த்தர் தமது ஜனத்திற்குச் சமாதானம் அருளி, அவர்களை ஆசீர்வதிப்பார்.

— சங். 29:11

27. அரசனின் ஆசை

இந்தியச் சிற்றரசர் ஒருவர் எனக்கு அழைப்பு விடுத்துத் தன்னோடு சில நாட்கள் தங்கும்படி என்னைக் கேட்டுக் கொண்டார். அவர் பல மேலை நாடுகளில் சுற்றுப் பயணம் செய்திருந்தபடியால் மேல் நாட்டுப் பழக்க வழக்கங்களைக் கைக்கொண்டு வந்தபோதிலும் ஆன்மீக காரியங்களிலும் அதிகம் கவனம் செலுத்தி வந்தார். ஒரு நாளிரவு என்னிடம் தம்மைப்பற்றிய விவரங்களைத் தனியே கூறினார்.

'இயேசு கிறிஸ்துவின் மூலம் நான் பெற்றிருக்கும் ஆசிகளுக்காக அனுதினமும் ஆண்டவரைத் துதித்து, நன்றி செலுத்துகிறேன். அதே சமயத்தில் கிறிஸ்துவை வெளிப்படையாக அறிக்கையிடாத என் பலவீனத்தையும் ஒத்துக் கொள்கிறேன். அவ்வாறு நான் அறிக்கையிட்டால், என்னுடைய சொந்தக் குடிமக்கள் மட்டுமின்றி கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த ஆங்கில அரசாங்கமும் என் அரசுரிமையைப் பறித்துவிடும். ஆகவே, மேலிடத்து அரசாங்கத்தை கிறிஸ்தவ அரசாங்கம்

என்பதைவிட ஆங்கில அரசாங்கம் என்றழைப்பதே பொருத்தமாகும். ஏனெனில், மத விஷயங்களைப் பார்க்கிலும், அரசியல் விஷயங்களையே அது பிரதானமாகக் கருதுகிறது. ஆனால், என் உரிமைகளை விட்டுக் கொடுப்பதை விட, மத சம்பந்தமான கடமைகளை நிறைவேற்றுவதே முக்கியம் என்பது எனக்குத் தெரியும். எனக்காகப் பரம சிம்மாசனத்தையே துறந்த என் இயேசுவுக்காக நான் இச்சிற்றரசைத் துறக்கச் சித்தமாயிருக்க வேண்டும். என் மனம் குழப்பத்தில் உள்ளது. நான் செய்ய வேண்டியது இன்னதென்று உணர்த்தி எனக்கு வழிகாட்டித் துணைசெய்ய ஆண்டவரை வேண்டிக் கொள்ளுங்கள்' என்று என்னிடம் கேட்டுக் கொண்டார்.

இவ்வுலகத்தைவிட மேலான தேவனுடைய ராஜ்யத்துக் கல்லவா முதலிடம் கொடுக்க வேண்டும்?

முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்.

— மத்தேயு 6:33

28. மதுப்பிரியனின் மனமாற்றம்

மோதிலால் என்பவன் குடிபோதையிலிருக்கும்போது பல தீச்செயல்களைச் செய்வது வழக்கம். அவனுடைய நண்பர்கள் மேலும் மேலும் செய்யுமாறு அவனைத் தூண்டிவிட்டு மகிழ்ந்தனர். மோதிலால் ஒருநாள் உண்மைக் கிறிஸ்தவன் ஒருவன் இல்லத்தில் தற்செயலாகத் தங்க நேர்ந்தது. அங்கு அவனது வாழ்க்கையின் தூய்மையையும் நிறைவையும் கண்ட மோதிலால், முற்றும் மனம் மாறி தன் நடத்தையைத் திருத்திக் கொண்டான். அவனது தீய நண்பர்களுக்கோ இது சற்றும் பிடிக்கவில்லை. கிறிஸ்தவ மதத்தைத் தழுவியதால் தன்னை மாசுபடுத்திக் கொண்டான் என்று குற்றம்சாட்டி அவனைத் துன்புறுத்தலாயினர். தான் குடிகாரனாகிப் பல தீமைகளைச் செய்தபோது தன்னைப் போற்றிக் கொண்டாடிய மக்கள், நன்மை வடிவான கிறிஸ்துவினால் இரட்சிக்கப்பட்டு

நலமானதை நடப்பிக்கும்போது அவர்களால் தான் சிட்சிக்கப் படுவதை எண்ணி வியந்தான். தன் சுற்றத்தாரால் சாதி விலக்கு செய்யப்பட்டு வீட்டை விட்டுத் துரத்தப்பட்டபோதும் அவன் மனம் தளரவில்லை. மகிழ்வுடனே கர்த்தரைத் துதித்து அவர்களுக்காக இறைவனிடம் வேண்டினான்.

ஊரைவிட்டே அவன் ஓடிப்போக வேண்டிய நாளும் வந்தது. அப்போது வேறொரு ஊருக்கு அவன் செல்லும் வழியில் நதியொன்றைக் கடக்க வேண்டும்; படகில் ஏறிக் கடக்கவிருக்கையில் பெரும் புயற்காற்று வீசி படகைக் கவிழ்த்தது. ஆண்டவரின் அருளால் அவன் நீந்திக் கரை சேர்ந்தான். அவன் எடுத்து வந்த பணப்பை ஆற்றோடு போயிற்று. ஒன்றிரண்டு ரூபாய்களே இப்போது அவன் கையில் எஞ்சியிருந்தன. காட்டு மார்க்கமாய் அவன் செல்கையில் கள்வர் அதையும் பறித்துக் கொண்டனர். உயிருள்ள அண்ணலின் புத்துயிரை அவன் பெற்றிராவிட்டால், அப்போதே உள்ளம் உடைந்து மடிந்திருப்பான். ஆனால் இறைவன் தரும் அற்புத அமைதியால் அவன் உள்ளம் நிறைந்திருந்தது. அதை யாராலும் பறித்துக் கொள்ள முடியாது என்று அறிந்திருந்தான். 'எல்லாம் எடுபட்ட பின்னரும், கிறிஸ்துவில் என்னிடமுள்ள அளவிட முடியாத செல்வத்தை யாரும் எடுக்க முடியாது' என்று அவன் கூறியபோது அக்கள்வரின் கடின உள்ளங்கள் நெகிழ்ந்தன. அவர்கள் அவனிடமிருந்து பறித்துக்கொண்ட பணத்தைத் திருப்பிக் கொடுத்தனர். பின், மோதிலால் வேறு ஊருக்குச் சென்று தன் உழைப்பினால் உயர்ந்து கிறிஸ்துவின் உத்தம ஊழியனாக வாழ்ந்தான்.

துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் ஆறுதலடைவார்கள்.

— மத்தேயு 5:4

29. துன்பத்திலும் இன்பம்

இறைவனின் பணிக்கென்று தன்னை ஒப்படைத்திருந்த ஒரு கிறிஸ்தவப் பெண்மணி நோய்வாய்ப்பட்டு பதினெட்டு

படகு கவிழ்ந்துவிட்டது!
(கதை எண் ௨8)

வருடங்களாய் படுத்த படுக்கையானாள். இனிய மணம் பரப்பும் எழில் மலரைப்போல் அவள் தன் படுக்கையில் படுத்திருந்த போது, அவளுக்கு ஆறுதல் கூற வந்த அன்பர்கள் அவளால் ஆறுதல் பெற்றுத் திரும்பினர்.

இப்பெண்ணின் அமைதியும், சாந்தமும் கிறிஸ்தவ மதத்தின் சத்தியத்தையே நம்ப மறுத்த ஒரு மனிதனின் கவனத்தை ஈர்த்தது. நோயின் கொடுமையைப் பல ஆண்டுகளாக அனுபவித்தபோதும் சமாதானத்தின் மலர்ச்சி குன்றாமல் அவள் கர்த்தரைப் போற்றி வருவதைக் கண்டு, அவள் வாழ்க்கையில் ஆழ்ந்ததொரு உண்மை இருக்க வேண்டு மென்று எண்ணத் தொடங்கினான். ஆர்வத்துடன் கிறிஸ்துவின் வாழ்க்கையைப் பற்றி ஆராய முற்பட்டான். அப்பெண்மணியிடம் சென்று,

'அம்மா, உங்கள் வாழ்வின் மேன்மையை நான் கண்டிரா விட்டால் கிறிஸ்தவ மார்க்கத்தின் உண்மையையும், ஜீவனுள்ள கிறிஸ்துவின் மீட்பையும் உணர்ந்திருக்கவே மாட்டேன். அற்புதமான உங்கள் கிறிஸ்தவ வாழ்வின் முன்னால் என் வேதாந்த விதண்டாவாதங்கள் தகர்க்கப்பட்டுப் போயின. திட ஆரோக்கியத்துடன் இருந்தால் இன்னும் அதிகத் தொண்டு புரியலாமே என்று தவறாக நீங்கள் எண்ணிக் கலங்க வேண்டாம். அவ்வாறிருந்திருந்தால் ஆண்டவர் உங்களுக்கு நற்சுகத்தைக் கட்டளையிட்டிருப்பார். ஆனால், இப்பலவீன நிலையில் நீங்கள் செய்துவரும் பெரும்பணியை வேறெந்த விதத்திலும் செய்திருக்க முடியாது. இதை ஒரு வியாதிப் படுக்கை என்றெண்ணாமல் உங்கள் நோயை ஒருவகை ஊழியம் என்று நம்புங்கள். நீங்கள் அனுபவிப்பது சாவுக்கேதுவாத நோயல்ல; கிறிஸ்துவிலுள்ள நித்திய வாழ்வுக்குச் சாட்சி' என்று கூறினான்.

இலாசருவின் மரணத்தைப்போல தன்னுடைய வியாதியும் கடவுளின் மகிமைக்குக் காரணமாயிருப்பதை உணர்ந்த அப்பெண் மகிழ்ச்சியடைந்தாள்.

மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.

— மத்தேயு 5:16

30. படுகொலை

சில ஆண்டுகளுக்கு முன்பு நடந்த ஆர்மீனியப் படுகொலையின்போது அங்கிருந்த போதகர் ஒருவர் எனக்குக் கடிதம் எழுதியிருந்தார். அதில்,

"ஆயிரக்கணக்கான கிறிஸ்தவ பக்தர்கள் என் கண் முன்னால் கொலையுண்டனர். நானும் படுகாயமுற்று மரித்தவனென்றே கருதப்பட்டேன். கொலைகளம் இதயத்தை உலுக்கும் கோரக் காட்சியாகத் தென்பட்டாலும், அதே சமயம் அத்துடன் பக்தியின் பேரானந்த உணர்வும் கலந்திருந்தது. ஆண்களும், பெண்களும், வயோதிகரும் இரக்கமின்றி வெட்டப்பட்டு வதையுண்டு மரித்தாலும் ஜீவனுள்ள கிறிஸ்துவின் வல்லமை அங்கிருந்த ஒவ்வொருவரிலும் வெளிப்பட்டதைக் கண்ணாரக் கண்டேன். கொலைகாரரும்கூட இதைப் பார்த்து அதிசயித்தார்கள். கிறிஸ்துவையும், தூத கோடிகளையும் மிகத் தெளிவாகத் தரிசித்து எங்கள் ஆத்துமாக்களை அவர் கரத்தில் அதிகமகிழ்வுடன் ஒப்படைத்தோம். உண்மையில் அது படுகொலையின் நாளாக அல்ல; திருமண நன்னாளாகவே காட்சியளித்தது. அன்று மரித்த பக்தர் குழாமுடன் நானும் அவர் சந்நிதிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தால் நலமாக இருந்திருக்குமே என்று எண்ணுகிறேன். ஆயினும் ஆண்டவர் இவ்வுலகில் என்னாலியன்ற சிறுபணியைச் செய்யும்படி என்னைக் காப்பாற்றினார்" என்று கூறியிருந்தார்.

இதைப்போன்ற அதிசய உண்மைகளின் மூலம் கிறிஸ்தவ வாழ்க்கையின் சத்தியம் இன்னும் நம்மிடையே சாட்சியாக விளங்குகிறது.

அவரோடுகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்.

— 2 தீமோ. 2:12

31. ஏழை மூதாட்டி

என் இளம் பருவத்தில் ஒருநாள் என் தந்தை எனக்குக் கைச் செலவுக்கு என்று கொடுத்திருந்த பணத்தை எடுத்துக் கொண்டு கடை வீதிக்குச் சென்று கொண்டிருந்தேன். வழியில் பசியிலும், குளிரிலும் வாடிக் கொண்டிருந்த ஒரு மூதாட்டியைக் கண்டேன். என்னிடம்அவள் உதவி கோரியபோது என் மனம் உருகியது. என் கையிலிருந்த பணத்தையெல்லாம் அவளிடம் கொடுத்துவிட்டேன். வீட்டுக்கு வந்த பிறகு அந்தக் மூதாட்டிக்கு ஒரு போர்வை கொடுக்காவிட்டால் அவள் குளிரால் இறந்து விடுவாள் என்று என் தந்தையிடம் கூறினேன். அவளுக்கு இதற்கு முன் எத்தனையோ தடவை தாம் உதவியிருப்பதாகவும் சுற்றுப்புறத்திலுள்ள மற்றவர்கள்தான் இப்போது உதவ வேண்டும் என்றும் அவர் என்னைத் தடுத்துவிட்டார்.

அவளுக்கு உதவி செய்ய என் தந்தைக்கு மனமில்லை என்று கண்டதும், அவர் பையிலிருந்து ஐந்து ரூபாய்களை நான் திருடிக்கொண்டேன். அதைக் மூதாட்டியிடம் போர்வை வாங்கிக் கொள்ளும்படி கொடுக்க வேண்டும் என்பது என் திட்டம். அந்த ஏழைக்கு உபகாரம் செய்வது எனக்குப் பெரும் திருப்தியை அளித்தாலும், நான் ஒரு திருடன் என்னும் எண்ணம் என்னை வதைத்தது. அன்று மாலை பணம் காணாமற்போனதையறிந்த என் தந்தை அதை நான் எடுத்தேனா என்று என்னைக் கேட்டார். இல்லையென்று மறுத்துவிட்டேன். இப்போது பொய்க் குற்றமும் சேர்ந்து கொண்டு என் மனச்சாட்சியை மேலும் துன்புறுத்தியது. தண்டனைக்குத் தப்பித்துக்கொண்டேனென்றாலும், என் மனச்சாட்சியின் சித்திரவதையைத் தாங்க முடியாமல் அன்றிரவு முழுவதும் நான் தூங்கவேயில்லை.

மறுநாள் அதிகாலையில் நான் என் தந்தையிடம் சென்று என் திருட்டையும் பொய்யையும் அறிக்கையிட்டு பணத்தையும் திருப்பிக் கொடுத்தேன். அவர் என்னைத் தண்டிப்பாரோ என்ற பயம் எனக்கிருந்தாலும், என் இதயபாரம் அப்போதே அகற்றப் பட்டுவிட்டது. ஆனால் என் தந்தை சற்றும் என்னைக் கடிந்து கொள்ளவில்லை. மனம் நெகிழ்ந்து என்னை அணைத்துக் கொண்டு, 'மகனே எப்போதும் நீ என் நம்பிக்கைக்குப் பாத்திரமானவன். என் நம்பிக்கை தவறானதல்ல என்று நிரூபித்துவிட்டாய்' என்றார். அவர் என்னை மன்னித்தது மட்டு மல்லாமல், என் விருப்பப்படி அந்த ஏழை மூதாட்டிக்குப் போர்வையும் வாங்கிக் கொடுத்தார்.

ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான்.

— நீதி. 19:17

32. சோதனை

இராம்பூருக்கு அருகிலுள்ள ஒரு கிராமத்திற்கு நற்செய்தி கொடுக்கச் சென்றிருந்தேன். நெடுநேரம் நான் பேசி முடிக்கையில் இருட்டிவிட்டது. என்னைத் தனியே விட்டுவிட்டு எல்லோரும் தத்தம் இல்லங்களுக்குச் சென்றுவிட்டனர். களைத்துப் பசியோடிருந்த நான் ஒரு மரத்தடியில் இளைப்பாற எண்ணினேன். அன்று முழுவதுமே எனக்கு உணவு கிடைக்க வில்லை. யாசிப்பதும் என் கொள்கைக்கு மாறானது. அங்கு நான் சோர்ந்து துவண்டு படுத்திருக்கையில் சாத்தான் என்னை சோதிக்க வந்தான். செல்வச் செழிப்பு மிக்க என் வீட்டில் நான் இருந்தபோது சகலமும் எனக்குரியதாயிருந்தது. கிறிஸ்துவுக் கென்று நான் அவையனைத்தையும் துறந்தபோதோ வறுமையி னாலும், பசிப் பிணியாலும் வாடுகிறேன் என்ற எண்ணத்தை என் மனதில் தோற்றுவித்தான். ஆனால், உடனுக்குடனே அவன் சோதனையை வென்று என்னுள்ளத்தில் இன்பமும், சாந்தியும் நிறைவதையுணர்ந்தேன். இதன் விளைவாக என் உதடுகளும்,

மீட்கப்பட்ட ஆத்மாவும் என் இறைவனைப் போற்றித் துதி கீதம் பாடத் தூண்டப்பட்டன. நள்ளிரவு வரை இவ்வாறு நான் கர்த்தரைப் பாடிக் கொண்டாடினேன். 'சுகபோகத்தில் திளைத்த போது எனக்குச் சற்றும் கிடைத்திராத இன்பமும் அமைதியும் இப்போது எனக்குள்ளன. இவற்றை உலகத்தால் அளிக்க முடியாது. என்னிடத்திலிருந்து பறிக்கவும் முடியாது' என்று வாய் விட்டுக் கூறிக் கொண்டேன்.

என்னுடைய பாட்டுக் குரல் கிராமத்தில் சிலரை எழுப்பி விட்டிருந்தது. அவர்களில் இருவர் என்னிடம் வந்தார்கள். என் அனுபவங்களைக் கேட்டு ஆச்சரியப்பட்டார்கள். காலையி லிருந்து நான் உணவேதும் உட்கொள்ளவில்லை என்று கேட்டதும் மிகவும் வருந்தியவர்களாக உடனே சென்று எனக்கு உணவு கொண்டுவந்து கொடுத்தார்கள். இறைவனுக்கும் அவர்களுக்கும் நன்றி செலுத்தியபின் என் பசியை ஆற்றி அயர்ந்த நித்திரையிலாழ்ந்தேன்.

அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார்.

— எபிரெயர் 2:18

33. தொட்டால் தீட்டு

நாடெங்கும் சுற்றியலைந்து நற்செய்தியைக் கூறிவந்த நான் ஒரு நாள் என் சொந்த ஊருக்குச் சென்றேன். என் பேச்சை அங்கும் பலர் ஆவலோடு கேட்டனர். மாலை என் வீட்டிற்குச் சென்றேன். முதலில் என் தந்தை என்னைக் காணவோ என்னை உள்ளே அனுமதிக்கவோ மறுத்துவிட்டார். கிறிஸ்தவனாகிவிட்டதன் மூலம் என் குல கௌரவத்திற்கு இழுக்கு வரவழைத்துவிட்டேன் என்பது அவர் கருத்து. ஆனால் சிறிது நேரத்திற்குப் பிறகு வெளியே வந்து, 'இன்றிரவு மட்டும் இங்கே தங்கிக்கொள்; விடிந்தவுடன் போய்விடு. இனிமேல் உன் முகத்தை எனக்குக் காட்டாதே' என்று கண்டிப்புடன் சொன்னார். நான் பதிலே பேசவில்லை. அன்றிரவு அந்த வீட்டின்

உணவையோ, பாத்திரங்களையோ நான் தொட்டுத் தீட்டுப்படுத்திவிடாதபடி என்னைத் தூரத்தில் உட்கார வைத்தார். இலையிலே உணவைப் பரிமாறி, நான் உணவருந்திய பின் குவளையை உயர்த்திப் பிடித்து என் கையில் நீரை வார்த்தார். தீண்டத்தகாத கீழ்ச்சாதியினன் ஒருவனிடம் உயர் குலத்தார் நடந்து கொள்ளும் முறையை என்னிடமும் கடைப் பிடித்தார். இதை கண்டதும் என் கண்ணீர் பொங்கி வழிந்து என் முகத்தை நனைத்தது.

ஒரு காலத்தில் என்னை உயிருக்குயிராக நேசித்த என் அருமைத் தந்தை, இப்போது தீண்டத்தகாதவனாகக் கருதி வெறுப்பதைக் கண்டு என் மனம் துடித்தது. ஆயினும், விவரிக்க இயலாத சமாதானம் என்னில் நிறைந்திருந்தது. 'அப்பா நீங்கள் என்னைக் கைவிட்டுவிட்டதைப் பற்றி பரவாயில்லை. எனக்காகத் தம் இன்னுயிரையே தியாகம் செய்த கிறிஸ்துவிடம் நான் சேர்ந்து கொண்டேன். அவர் அன்பு மாறாதது; உங்கள் அன்பைவிட உயர்ந்தது. கிறிஸ்தவனாக மாறுவதற்கு முன் அவரைத் தூஷித்தேன். துன்புறுத்தினேன். ஆனால், அவர் என்னைக் கைவிடவில்லை. கடந்த காலத்தில் நீங்கள் காட்டிய அன்புக்காக மாத்திரமல்ல; இப்போது காட்டும் வெறுப்புக்காக வும் நன்றி செலுத்துகிறேன்' என்று கூறி அவரை வணங்கிய பின்னர் நான் வீட்டைவிட்டுப் புறப்பட்டேன்.

நீர் என் உத்தமத்திலே என்னைத் தாங்கி, என்றென் றைக்கும் உம்முடைய சமுகத்தில் என்னை நிலைநிறுத்துவீர்.

— சங். 41:12

34. ஒரு வித்தியாசம்

வேதாந்தியொருவர் ஒரு பரிசுத்தவானிடம் சென்று, 'மக்கள் உம்மைப் பரிசுத்தர் என்று போற்றுவது ஏன்?' என்று கேட்டார்.

'அன்பினாலும், மரியாதையினாலுமே' என்று விடை பகர்ந்த அத் தூயவன், 'அவர்களைப் போலவே நானும் ஒரு

பாவி. கடவுளுடைய மட்டற்ற கிருபையினாலும், இரக்கத்தி னாலும் மட்டுமே மீட்கப்பட்டுள்ளேன்' என்றறிக்கையிட்டார். அப்போது அந்த வேதாந்த நிபுணர், 'அப்படியானால் உமக்கும் மற்றவர்களுக்கும் உள்ள வித்தியாசம் என்ன ?" என்று கேட்டார். அதற்கு அந்த உத்தமர்,

'சாக்ரடீஸைப் பற்றி உமக்குத் தெரியும். தனக்கு ஒன்றுமே தெரியாது என்று தான் தெரிந்து கொண்டதாக அவர் ஒருநாள் அறிவித்தார். வேதாந்தியான அவருக்கு ஒன்றுமே தெரியா தென்றால், அவருக்கும் மூடரான மற்றவர்களுக்கும் உள்ள வித்தியாசம் என்ன என்று மக்கள் அவரைக் கேட்டனர். "எனக்கு ஒன்றுமே தெரியாதென்று எனக்குத் தெரியும். மற்றவர்களுக்கோ, தங்களுக்கு ஒன்றும் தெரியாதென்பது தெரியாது" என்றாராம். அதே போலத்தான் எனக்கும் மற்றவர் களுக்கும் ஒரு வித்தியாசமிருக்கிறது. நான் பாவியென்று நானே அறிந்திருக்கிறேன். மற்றவர்களோ, தாங்கள் பாவிகள் என்பதை அறியாதிருக்கிறார்கள். ஆகையால்தான் தங்கள் மீட்பைக் குறித்து அலட்சியம் கொண்டிருக்கிறார்கள்' என்றார். வேதாந்தி வாய்மூடி மௌனியாகிவிட்டார்.

தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான். அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்.

— நீதி. 28:13

35. சுரங்கத்துத் தங்கம்

பொன்னும் வெள்ளியும் வைரங்களும் பூமியில் புதையுண்டு கிடந்தால் பயனற்றிருப்பதுபோல, ஆண்டவரால் மனிதனுக்கு அளிக்கப்பட்டிருக்கும் சக்திகளும், திறமைகளும் சரிவர உபயோகிக்கப்படாவிட்டால் பயனற்றவையாகி விடுகின்றன. ஒரு கிறிஸ்தவனின் வாழ்வில் கிறிஸ்து உட்புகும் போது, அவனில் மறைந்திருக்கும் செல்வங்களை அவர் வெளிக் கொணர்ந்து உலகத்தில் தம் திட்டங்களை நிறைவேற்றும்

கருவிகளாக அவர்களைப் பயன்படுத்துகிறார். இவ்வாறே மீன் பிடித்தவர்கள் மனிதரைப் பிடிப்பவர்களாகப் பயன்படுத்தப் பட்டனர். அவர்கள் மூலமாக மனுக்குல மீட்பென்னும் தமது அருட் திட்டத்தைச் செயலாக்கினார் இறைவன்.

சுரங்கத்துத் தங்கம் சுத்தமானதல்ல. ஆதலால், அதைப் புடமிட்டுப் புனிதமாக்குகிறார்கள். வயலில் கண்டெடுக்கப்படும் வைரத்துக்கு உருவமில்லை. அதை அறுத்து வெட்டி ஒளி உமிழச் செய்கிறார்கள். அதேபோல தூய ஆவியின் நெருப்பு கிறிஸ்தவனின் வாழ்வை அதன் அசுத்தத்தினின்று புடமிட்டுப் புனிதமாக்குகிறது. கிறிஸ்துவின் சிலுவை அதை வெட்டி இழுத்து அழகுறப் பதித்து, அது பேரொளி சிந்தவும் தேவனின் மகிமைப் பிரகாசத்தைப் பிரதிபலிக்கவும் செய்கிறது.

நிலத்தில் விதைக்கப்படும் கோதுமை வித்து இருளில் புதைந்து போராடித் துன்புற்ற பின்னரே அதன் முளை மேலெழுந்து கிளம்பி சூரிய ஒளியையும் அனலையும் பெற்றுப் பலன் தருகிறது. இதே போலத்தான் மனிதனும் துன்பத்துக்குப் பின் திடனும், திறமையும் பெற்று இறைவனுக்காகப் பலன் தருகிறான்.

வெள்ளியைக் குகையும், பொன்னைப் புடமும் சோதிக்கும்; இருதயங்களைச் சோதிக்கிறவரோ கர்த்தர்.

— நீதி. 17:3

36. குருவியும் குஞ்சுகளும்

மலைகளின் வழியாகப் பயணம் செய்தபோது, இளைப் பாறுவதற்காக ஒரு பாறையின் மேல் உட்கார்ந்தேன். பாறையின் கீழிருந்த புதரில் ஒரு குருவிக் கூட்டிலிருந்து குஞ்சுகள் கூப்பிடும் ஒலி கேட்டது. தாய்க்குருவி அவைகளுக்கு இரை கொண்டு வந்தது. அதன் இறக்கைகளின் சலசலப்புக் கேட்டதும், அவைகள் கூப்பிட ஆரம்பித்தன. தாய்க்குருவி இரை ஊட்டிப் பறந்ததும் அவை அமைதியாயின. நான் பாறையி லிருந்து இறங்கி அக்குருவிக் கூட்டைப் பார்த்தேன். கண்

விழியாக் குஞ்சுகள் தாய்க் குருவியைப் பாராதிருந்தும், தாய்க் குருவி நெருங்கியதும் தங்களது வாய்களைத் திறந்தன. 'வருங் குருவி தாயோ விரோதியோ, அதன் அலகில் இருப்பது இரையோ நஞ்சோ என்பது எங்களுக்குத் தெரியாது; எனவே, எங்கள் தாயையாவது, ஆகாரத்தையாவது கண்களால் காணு மட்டும் வாயைத் திறவோம்' என அவைகள் இருந்திருந்தால் அவைகள் பிழைத்திருக்கவேமாட்டா. கண்கள் திறக்குமுன் பசியினால் செய்துப்போயிருக்கும். ஆனால், அவைகளுக்கோ தாய்க் குருவியின் அன்பைப்பற்றி சிறிதும் சந்தேகமில்லை. சில நாட்களுக்குப் பின் கண்கள் திறந்தபின் அருமையான தாயைக் கண்டு ஆனந்திக்கும்; ஏற்ற காலத்தில் ஆகாயத்தில் பறக்கும்.

அடிக்கடி நமது மனதில் பரம பிதாவையும், அவரது அன்பையும் குறித்துச் சந்தேகம் தோன்றும்போதெல்லாம், முதன்மையான படைப்பாகிய நாம் அற்பக் குருவிக் குஞ்சு களுக்குத் தாழ்ந்தவர்களாகத் தோன்றவில்லையா? ஆண்ட வருக்காக உள்ளத்தில் ஏங்குகிற நாம், அவரிடமிருந்து ஆன்ம ஆகாரம் பெற்றுக் கொள்கிறோம். ஏற்ற காலத்தில் முழு வளர்ச்சியடைந்து அவரை முகமுகமாய்ப் பார்க்கும்போது மகிழ்வோம்.

உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு.

— சங். 37:5

37. ஒரு ஞானி

ஞானி ஒருவர் தாம் சென்ற வழியில் மூன்று ஆட்களைக் கண்டார். முதல் ஆள் முகம் வாடி பயத்தால் நடுங்கிக் கொண்டிருந்தான். அவர் அவனைப் பார்த்து, 'உன் நிலைக்குக் காரணம் யாது?' என்று கேட்டார். அதற்கு அவன் 'நான் நரக அக்கினிக்குள் தள்ளப்படுவேனே என்ற எண்ணம் ஓயாமல் என்னை உறுத்துகிறது' என்றான். 'ஞானத்தின் ஆரம்பமான தெய்வ பயத்திற்குப் பதிலாக படைக்கப்பட்ட நரக அக்கினிக்கு

நீ அஞ்சுகிறாயே, பரிதாபம். உன் தெய்வ வணக்கம் மெய்யான தல்ல; அது நீ நரக அக்கினிக்குத் தப்புவதற்காகக் கொடுக்கும் கைக்கூலியே' என்று அந்த ஞானி சொன்னார்.

இரண்டாவது மனிதன் துயரமும், கவலையும் தன்னை அழுத்த மிகவும் வருந்திக் கொண்டிருந்தான். 'நீ ஏன் இவ்வளவு துயரம் நிறைந்தவனாய் இருக்கிறாய்?' என்று ஞானி கேட்க, 'மோட்சானந்தமும், இளைப்பாறுதலும் கிடைக்காமற் போய்விடுமோ எனக் கலங்குகிறேன்' என்றான். 'படைத்தவரை யும், அவரது ஆச்சரியமான அன்பையும் எண்ணாமல், அவர் உண்டாக்கின மோட்சத்தை அடைய வேண்டுமென்ற வாஞ்சையால் மட்டும் நீ கடவுளை வணங்குவது வெட்கப்படத் தக்கது' என்றார் ஞானி.

மிகவும் திருப்தியாயும், மகிழ்ச்சியாயுமிருந்த மூன்றாவது மனிதனைக் கண்டார் ஞானி. அவனிடம், 'உன் மகிழ்ச்சி, சமாதானம் இவற்றின் இரகசியம் யாது?' எனக் கேட்டார். 'ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்கப் போதித்த அவரை என் முழு இருதயத்தோடும் ஆத்துமாவோடும் நேசித்து அன்பினாலேயே அவரை வணங்கி ஆராதிக்க அருள் புரிய, இடைவிடாமல் அவரை வேண்டிக் கொள்கிறேன். நரகத்திற்குப் பயந்து அவரை வணங்குவேனாகில், மோட்சமே கிடையாமற் போவதாக. ஆனால், அன்பினால் ஏவப்பட்டு நான் அவரை ஆராதிப்பதால், என் முழு இருதயமும் அவரது அன்பாலும் பிரசன்னத்தாலும் நிரம்பும்படி அவர் தம்மை எனக்கு வெளிப்படுத்துவாராக' என்று அவன் சொன்னான்.

தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.

— ரோமர் 8:28

38. தந்தையும் மகனும்

வியாபாரி ஒருவன் அயல்நாடு சென்று வசித்து வந்தான். அவன் போய் சிறிது காலத்திற்குள் வீட்டில் அவனுக்கு ஒரு

மகன் பிறந்தான். தாயோ மரித்தாள். அடிக்கடி அந்த வியாபாரி அந்த மகனுக்குச் செலவிற்கென தனது இனத்தாருக்குப் பணம் அனுப்பிவந்தான். அநேக வருடங்களுக்குப் பின் தகப்பன் தன் நாட்டிற்குத் திரும்பி வந்து, இரவில் மகனைக் காணும் பொருட்டு, தன் வீட்டின் கதவைத் தட்டினான். கதவைத் திறந்த மகன், வெளியே ஓர் அன்னியன் நிற்பதைப் பார்த்து கள்வன் என நினைத்து கடுமையாய்த் திட்டினான். திரும்ப திரும்ப அந்த வியாபாரி, தான் அவனது தந்தை என்று எடுத்துக்காட்ட முயற்சி செய்தான். அவ்வாலிபனோ தகப்பனை ஒருக்காலும் கண்டதில்லை. அவனைப் பற்றியாவது அவன் அன்பைப் பற்றியாவது அறியான். எனவே அவன் மேல் பாய்ந்து அவனைக் காயப்படுத்தி, நகரக் காவற்காரர் வசம் ஒப்புவித்தான்.

காலையில் நடந்த விசாரணையில், அந்த வியாபாரி, உண்மையில் அதிக நாட்களாகப் பிரிந்திருந்த தகப்பன் என வெளிப்பட்டது. அப்பொழுது அந்த வாலிபன் மிகவும் மனத் துயரமடைந்தான். அழுது மனம் கலங்கி தன் தந்தையிடம் மன்னிப்புக் கோரினான்.

நம்மில் எத்தனையோ ஆயிரம் பேர் இக்காலத்திலும்கூட மனந்திரும்பி, பரம பிதாவிடம் சேராமலிருக்கிறோம். நம் கடின நெஞ்சத்தையுணர்ந்து அவரிடம் மன்னிப்பு வேண்டி அழியா வாழ்வைப் பெறுவோம்.

அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார்; அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை.

— யோவான் 1:11

39. அபூர்வ அன்பு

1921 – ஆம் ஆண்டில் இமயமலையிலே ஒரு காட்டுத் தீ உண்டாயிற்று. அநேகர் அந்நெருப்பை அணைக்க முயன்றனர். அப்போது சிலர் ஒரு மரத்திற்குள் கூர்ந்து பார்ப்பதைக் கவனித்தேன். 'எதைப் பார்க்கிறீர்கள்!' என்றேன். ஒரு மரத்தில் குஞ்சுகள் நிறைந்த ஒரு கூட்டைக் காட்டினார்கள். அம்மரத்தின்

அன்னியர் என்று நினைத்து விரட்டுதல்
(கதை எண் 38)

கிளைகள் எரிந்துகொண்டிருந்தன. அதன்மேல் ஒரு பறவை துடிதுடிப்புடன் அங்குமிங்கும் பறந்தது. அவர்கள், 'நாங்கள் கூட்டை ஆபத்தினின்றும் தப்புவிக்க விரும்புகிறோம், ஆனால், நெருப்பின் அகோரத்தால் நெருங்க முடியவில்லை' என்றனர். சில நிமிடங்களுக்குள் அக்கூடும் தீப்பற்றி எரிந்தது. அப்போது தாய்ப்பறவை ஓடிவிடும் என நான் எண்ணினேன். ஆனால் அப்பறவை தாழப்பறந்து தன் செட்டைகளை குஞ்சுகளின்மேல் விரிக்கக் கண்டேன். சில நிமிடங்களில் குஞ்சுகளோடு தாய்ப் பறவையும் எரிந்து சாம்பலாயிற்று. இதைப்போன்ற காட்சியை நான் என்றுமே கண்டதில்லை. அங்கே நின்றவர்களைப் பார்த்து,

'இந்த அபூர்வ அன்பைக்குறித்துப் பிரமிக்கிறோம். ஆனால் தயவுசெய்து யோசியுங்கள்; ஆச்சரியப்படத்தக்க அன்பு இந்த சின்னஞ்சிறிய சிருஷ்டியிலிருந்தால், தன்னலமற்ற இந்தப் பறவையைச் சிருஷ்டித்த ஆண்டவனது அன்பு அபூர்வத்திலும் அபூர்வமல்லவா? இந்தவிதமான மட்டற்ற அன்பே அவரை வானத்திலிருந்து இறங்கி மனிதனாகச் செய்தது. அவர் தமது சொந்த ஜீவனையே கொடுத்து பாவத்தால் மரிக்கும் நம்மை இரட்சிக்கிறார்' என்றேன்.

மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக் கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்.

— ஏசாயா 53:4

40. நம் கடமை

ஒரு யோகி தனது பயணத்தில் சிறிது கோதுமை வைத்திருந்தான். நீண்ட நாட்களாகப் பயணம் செய்தபின் தனது பைகளுக்குள் பல எறும்புகளைக் கண்டான். அவன் வழியில் உட்கார்ந்து அந்த எறும்புகளுக்கு உண்டான கடின நிலைமையைக் குறித்துச் சிந்தித்தான். தங்கள் இருப்பிடமான குழிகளைவிட்டு அலைந்து, பைக்குள் கிடந்த அந்த அற்ப பிராணிகளுக்காக அவன் பரிதவித்து, தான் வந்த வழியாகத்

திரும்பி, அந்த எறும்புகளை அவைகள் குழிகளில் பத்திரமாய் கொண்டு விட்டான்.

உதவியற்ற பிராணிகளுக்கு அனுதாபம் காட்டுவது ஒருவேளை ஒருவனுக்குச் சாத்தியப்படலாம். ஆனால் ஆண்டவருடைய தெய்வச்சாயலில் உண்டாக்கப்பட்டு, கெட்ட குமாரனைப்போலவும், காணாமற்போன ஆட்டைப்போலவும் வழிதப்பின மக்களிடம் எவ்வளவு பரிதாபமும் பரஸ்பர உணர்ச்சியும் அற்றுப் போகிறோம்! அவர்களை நீதியின் பாதைக்குத் திருப்புவதும், அவர்களை பிதாவின் நித்திய வீட்டிற்குத் திரும்பக்கொண்டு சேர்ப்பதும் நாம் செய்ய வேண்டிய கடமையல்லவா ?

தேவனோடு வாழ்ந்து எல்லாவித ஆன்ம ஆசீர்வாதங் களையும் பெற்றவர்கள், அவரைப்பற்றிக் கேள்விப்படாதவர்கள் நித்திய பேரின்ப பாக்கியங்களைப் பெற்றுக்கொள்ளத் தக்கதாக அவரது வார்த்தையை அவர்களிடம் போய்ச் சொல்ல வேண்டும்.

நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்.

— மாற்கு 16:15

41. சிற்பியின் செயல்

பிரான்ஸ் நாட்டு ஏழைச் சிற்பி ஒருவன் களிமண்ணால் மிகவும் அழகான வடிவம் ஒன்றை அப்போதுதான் செய்து முடித்திருந்தான். அந்த இரவில் மிகக் கொடிய குளிரும் ஈரமும் ஏற்படவே, தனது சிலை உறைபனியால் சேதமாகுமோ என அஞ்சினான். கடைசியில் தனது போர்வைகளை எடுத்து சிலையைச் சுற்றி மூடிவிட்டுத் திரும்பவும் படுத்துக் கொண்டான். ஆனால், காலையில் குளிர் தாங்காமல் அவன் செத்துக் கிடந்தான். அந்தச் சிலையோ பழுதாகாமல் அப்படியே இருந்தது.

கைகளால் செய்யப்படுபவற்றிற்காகவும், உயிரற்ற பொருட்களுக்காகவும், தம் உயிரையே கொடுக்க ஆயத்தமா

யிருக்கும் மக்கள் இருக்கின்றனர். அவ்வாறாயின் ஆண்டவர் தமது சாயலில் படைத்த உயிருள்ள ஆத்துமாக்களுக்காகத் தமது ஜீவனைக் கொடுக்க, எவ்வளவு அன்புள்ளம் கொண்டிருந்திருக்க வேண்டும்?

எனவே, அள்ளக்குறையாத அவரது அன்பை, அவரது பாதப்படியில் அமர்ந்து நாம் பெற்றுக்கொள்ள வேண்டும். அதன்பின் நாம் நம்மில் அன்புகூருவதுபோல பிறரையும் நேசித்து, அன்புகூர்ந்து அவர்களுக்குச் சேவை செய்ய வேண்டும். இப்படிச் செய்வதால் மட்டுமே நாம் நமது சிருஷ்டிகரும், ஆண்டவருமானவரின் நோக்கத்தையும் சித்தத்தையும் நிறைவேற்றினவராவோம்.

அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்.

— 1 யோவான் 3:16

உன்னில் நீ அன்புகூருவதுபோல் பிறனிலும் அன்புகூருவாயாக.

— லேவி. 19:18

42. இரு கைதிகள்

தெய்வ பக்தியுள்ள ஒரு மனிதன் ஓர் அவசர வேலையினிமித்தம் நள்ளிரவில் தொலைதூரமுள்ள ஓரிடத்திற்குச் செல்ல வேண்டியதிருந்தது. அவன் போகும்போது கள்வன் ஒருவன், பூட்டை உடைத்து கடையைத் திறந்து கொண்டிருக்கக் கண்டான். உடனே அவனிடம் சென்று, "பிறரது உடைமையை நீ அபகரித்து நஷ்டம் விளைவிப்பது பெரிய பாவம்" என்று கூறினான். கள்வன், "நீ உயிருடன் போக வேண்டுமானால் பேசாமல் போய்விடு. இல்லையானால், உனக்குத் தொந்தரவு ஏற்படும்" என்று எச்சரித்தான். அந்த மனிதனோ தன் முயற்சியை விடவில்லை. கள்வன் தன் சொல்லுக்கு இணங்காத



கொள்ளைக்காரன் யார்?
(கதை எண் ௪௯)

போது கூக்குரலிட்டு அயலகத்தாரை எழுப்பினான். அவர்கள் கள்வனைப் பிடிக்க பாய்ந்துவந்தனர். அந்த நல்ல மனிதன், கள்வனைக் குற்றஞ்சாட்டவும், அவன் இவன்மீது குற்றம் சாட்டினான். சாட்சியாக ஒருவரும் இல்லாததால் இருவரையும் சிறைப்படுத்தி ஓர் அறையில் அடைத்து வைத்தார்கள். காவல் அதிகாரியும், அவனோடு சிலரும் அவர்களது உரையாடலைக் கேட்க மறைந்திருந்தனர். உடன் கைதியாயிருந்த அந்த நல்ல மனிதனைக் கள்வன் பார்த்து, "உன்னை எப்படி மாட்டி வைத்தேன் பார்த்தாயா? நான் முதலிலேயே உன்னைப் போய்விடு அல்லது துன்பப்படுவாய் என்று சொன்னேனே? இப்போது உன் உண்மை நடத்தை எவ்வாறு உன்னைக் காப்பாற்றுகிறது பார்ப்போம்?" என்று கூறினான். இதைக் கேட்டுக்கொண்டிருந்த அந்த அதிகாரி, கதவைத் திறந்து அந்த நல்ல மனிதனை விடுதலை செய்து, பொருளும் கொடுத்து அனுப்பி வைத்தான். கள்வனையோ நையப்புடைத்து சிறைச் சாலைக் கிடங்கில் அடைத்து வைத்தான்.

பொய்ச் சாட்சிக்காரன் ஆக்கினைக்குத் தப்பான்; பொய்களைப் பேசுகிறவனும் தப்புவதில்லை.

— நீதி. 19:5

43. வேட்டைக்காரன்

ஆற்றங்கரையிலுள்ள ஒரு மரத்தின் மேல் தேன் கூட்டைக் கண்ட ஒரு வேட்டைக்காரன், அம்மரத்தின் மீதேறி, தன் உயிர் அபாயத்திலிருப்பதையும் அறியாமல் ஆனந்தமாகத் தேனை ருசித்துக் கொண்டிருந்தான். அவனை விழுங்க அந்த மரத்தினடியிலுள்ள ஆற்றில் ஒரு முதலை தன் வாயைத் திறந்து காத்துக்கொண்டிருந்தது. அதற்குத் தப்பி ஓடாதபடி மரத்திற்கு மறுபுறம் ஓநாய்கள் அவனைத் துண்டு துண்டாக்கக் காத்திருந்தன. அவ்விரு அபாயத்தோடு, அவன் ஏறியிருந்த மரத்தின் வேரையே ஒரு சிறு பூச்சி தின்னத் தொடங்கியது.

ஆக, சிறிது நேரத்திற்கெல்லாம் மரம் வேரோடே கிளம்பி ஆற்றில் விழ அந்த மூடன் முதலைக்கு இரையானான்.

இதே போலவே, மரத்தைப் போன்ற இந்த உடலில் ஏறியிருக்கும் ஆத்துமா, பாவமென்னும் மாயையும் போலியுமான தேனை சில காலம் ருசிக்கிறது. ஆனால் இவ்வுலகமென்னும் பயங்கரக் காட்டிலே தனக்கிருக்கும் அபாயத்தைப் பற்றி சிறிதும் கவலையற்றதாயிருக்கிறது. அங்கே சாத்தான் அதைக் கிழித்து நாசப்படுத்த விரும்புகிறான். முதலையைப் போன்று, நரகம் எப்போது விழுங்கலாமென்று வாயைத் திறந்து காத்திருக்கிறது. ஊடே, பாவமாகிய கண்ணுக்குத் தோன்றாத சிறிய பூச்சிகள் சரீரத்தையும் ஜீவ வேர்களையும் அடியோடு தின்று கொண்டு போக, அந்த ஆத்துமாவானது ஒரே மட்டமாகக் கீழே விழுந்து நரகத்திற்கு இரையாகிப் போகிறது.

ஆனால், இறைவனிடத்தில் வரும் பாவிக்கோ, பாவம், சாத்தான், நரகம் என்பவைகளினின்று இரட்சிப்பை அருளுவதோடு யாரும் அவனிடமிருந்து பறித்துக்கொள்ள முடியாத நித்திய ஜீவனையும் அளிக்கிறார்.

நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன். அவைகள் ஒருக்காலும் கெட்டுப் போவதில்லை; ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக் கொள்வதுமில்லை.

— யோவான் 10:28

44. மாறுதல்

இளைஞன் ஒருவன் தன் தகப்பன் வீட்டைவிட்டு கொள்ளைக்காரர் கூட்டத்தில் சேர்ந்து தானும் ஒரு கொள்ளைக் காரனாக மாறிவிட்டான். அவன் மனம் வருந்தி வீட்டிற்குத் திரும்ப விரும்பினான். தான் அவனை முழுதும் மன்னித்து வீட்டில் ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருப்பதாக ஊழியக்காரர் அவனிடம் போய்ச் சொல்லி வரும்படி அத்தந்தை கட்டளை யிட்டான். காட்டின் அபாயத்தாலும், கொள்ளைக்காரர்களின்

பயத்தாலும் எல்லா ஊழியரும் போக மறுத்துவிட்டனர். பிள்ளையை பிதா நேசித்ததுபோல பிதாவை நேசித்த மூத்தபிள்ளை, தன் தகப்பன் அனுப்பும் பாவமன்னிப்பாகிய நற்செய்தியைத் தான் போய்ச் சொல்லி வருவதாக ஏற்றுக் கொண்டான். தன் வீட்டை விட்டுக் காட்டில் நுழைந்தபோது, கொள்ளைக்காரர் அவன்மேல் பாய்ந்து கிட்டத்தட்ட கொன்று விட்டார்கள். அவன் தம்பியும் அக்கள்வரில் ஒருவனாக இருந்தான். படுகாயப்பட்டவன் தன் தமையன் என்றுணர்ந்த வுடன் அவன் துயருற்றுப் புலம்பினான். கண்ணீர் விட்டான். அத் தருணத்தில் தமையன் தன் தகப்பன் அனுப்பின செய்தியைக் கூறிவிட்டு, 'போதும், என் ஜீவியத்தின் நோக்கம் முடிந்தது' என்று சொல்லி தன் உயிரை விட்டான்.

தமையன் அடைந்த துயரம், அவன் இருதயத்தைத் தைக்கவே உடனே மனம் திருந்தி தன் தகப்பனிடம் சேர்ந்தான். அந்நாள் முதல் அவன் வாழ்க்கை மாறுதலடைந்தது.

உன் மீறுதல்களை மேகத்தைப் போலவும், உன் பாவங்களைக் கார்மேகத்தைப் போலவும் அகற்றிவிட்டேன். என்னிடத்தில் திரும்பு; உன்னை நான் மீட்டுக் கொண்டேன்.

— ஏசாயா 44:22

45. ஜீவ கிரீடம்

அரசன் ஒருவன் தான் மரிக்கும்போது தன் உண்மையுள்ள ஊழியக்காரனை நோக்கி, 'நான் போகப்போகிற இடத்திற்கு நீ போய் என் வருகையைத் தெரிவி. எனக்காக அவர்களை ஆயத்தப்படுத்த நான் உன்னை முன்னதாக அனுப்புகிறேன். ஆகையால் இப்போது நீ மரித்தவர்களிடம் சென்று நான் வருவதாகத் தெரிவி' என்றான். உடனே மறு கேள்வி கேட்காமல் அந்த உத்தம ஊழியன் பட்டயத்தால் தன்னைக் குத்திக்கொண்டு அரசனுக்கு முந்தி இறந்தோர் கூட்டத்தில் போய்ச் சேர்ந்தான். நாமும் நம் இறைவனின்

ஊழியத்துக்காக நமது ஜீவனையும் கொடுக்க தயாராக இருக்க வேண்டும்.

கொலைபாதகன் ஒருவனுக்குத் தூக்குத்தண்டனை வழங்கப்படுவதற்குப் பதிலாக யுத்த களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டான். அங்கே அவன் தன் அரசனுக்காகவும், நாட்டிற்காகவும் போர்புரிந்து காட்டின வீரமும், இராஜ விசுவாசமும் கொஞ்சமல்ல. முடிவில் வெற்றி பெற்றான். யுத்தத்தில் பெற்ற காயங்களையும், வடுக்களையும், பராக்கிரமங்களையும் இராஜா கண்டு, அவன் கொலை பாதகத்தை அவனுக்கு மன்னித்ததுமின்றி உயர்ந்த பதவியையும் வெகுமதியையும் அளித்தான்.

இதைப்போலவே யார் யார் தங்கள் சகோதர சகோதரி களை மீட்கும்படி தைரியமாகவும் உண்மையாகவும் சாத்தா னோடு போர் புரிந்து ஜெயமடைகிறார்களோ அவர்களுக்கு பாவமன்னிப்பை ஈந்து எக்காலமும் தேவனுடைய அரசிலே அமர அவர்களுக்கு சிம்மாசனத்தையும், கிரீடத்தையும் அருளிச் செய்வார்.

நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடுகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங் கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்கா சனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்.

— வெளி. 3:21

46. இரத்தினக் கற்கள்

ஒரு காட்டிலுள்ள ஆற்றங்கரையோரமாய் ஒரு வேட்டைக் காரன் நடந்து சென்றான். வழியில் சில கவர்ச்சியான கற்கள் கிடக்கவே அவற்றை எடுத்தான். அவற்றின் மதிப்பை அறியாத அவ்வேடன் ஒவ்வொன்றாய் கவணில் வைத்து மரத்தின் மேலிருந்த பறவைகளை எறிந்தான். ஒரேயொரு கல் தவிர மற்றக் கற்களையெல்லாம் எறிந்துவிட்ட அவன், பட்டணத்தின் வீதி வழியாக நடந்து போகையில் அதை ஓர் இரத்தின

வியாபாரியிடம் காண்பித்தான். அவ்வியாபாரி அதைப் பார்த்த போது அது மிக்க விலையுள்ளதென்றும், அதனால் அவன் பல ஆயிரம் ரூபாய் அடையலாமென்றும், அம்மூட வேடனுக்கு விளக்கினான். அவ்வேடன் அதைக் கேட்டதும் துயருற்று, 'ஐயோ பறவைகளைக் கொல்வதில் இந்த இரத்தினக் கற்களை யெல்லாம் ஆற்றில் எறிந்துவிட்டேனே! இல்லையெனில் நான் கோடீஸ்வரனாய்விடலாமே. அந்த மட்டும் ஒன்றாவது மீந்ததே' என்று புலம்பினான்.

இவ்விதமாகவே ஒவ்வொருநாளும், ஒவ்வொரு விலை யுயர்ந்த இரத்தினக் கற்களாயிருக்கிறது. ஆனால் வீண் ஆசைகளாகிய பறவைகளைச் சுடுவதில், மாயையான ஆற்றில் அநேக அருமையான நாட்களை நஷ்டப்படுத்துகிறோம். ஆனால் மீந்தவைகளையாவது காப்பாற்றி நல் உபயோகம் செய்யும் பட்சத்தில் நாம் பரம பொக்கிஷத்தைச் சம்பாதிக்கலாம்.

பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள்.

— மத்தேயு 6:20

காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்.

— எபேசியர் 5:16

47. வானம்பாடி

ஓர் இயற்கை விஞ்ஞானி, ஒரு வானம்பாடியின் முட்டை களைக் குளிர் பிரதேசத்திற்குக் கொண்டு சென்றான். முட்டைகள் பொரித்து குஞ்சுகள் வெளியே வந்ததும், தாம் தோன்றிய தேசத்தையே அவற்றின் இருப்பிடமாகக் கருதி, அவை தாபரிக்கும் என்பது விஞ்ஞானியின் கணிப்பு. குஞ்சுகள் வெளிப்பட்டன. வேனிற் பருவத்திற்குப்பின் அவை அவற்றின் சொந்த இடத்திற்கே திரும்பிவிட்டன. பனிப்பிரதேசத்திற்கு அவை செல்லவேயில்லை. அவ்வாறு, நாம் இப் பூமியில் பிறந் தாலும் இந்த இடத்திற்கு உரியவரல்ல. உடலைத் துறந்து செல்ல

வேடன் பறவையின்மீது கல்லெறிகின்றான்
(கதை எண் 46)

வேண்டிய தருணம் வந்ததுமே, நாம் நமது நித்திய வீட்டைச் சேருவோம்.

ஒருமுறை மெக்சிகோ குடாவில் ஒரு பறவையைப் பிடித்து 850 கி.மீக்கு அப்பாலுள்ள ஓரிடத்திற்கு அனுப்பினார்கள். முழுவதும் மூடியிருந்த ஒரு கூண்டில் அடைத்து அனுப்பப் பட்டதால், பறவைக்குத் தான் சென்ற பாதை தெரியாதிருந்தது. ஆயினும் பறவை வளர்ந்தபோது எவ்வித உதவியுமின்றி, தான் எந்த இடத்தில் பிடிபட்டதோ, அதே இடத்திற்குச் சிரமமின்றி வந்து சேர்ந்தது. இயல்பூக்கம் இதைச் சாதித்தது. இவ்வாறே, தேவகிருபையால் துளிர்க்கப்பட்ட மனிதனின் ஆத்துமாவும், தூய ஆவியானவரின் துணையோடும் வழிநடத்துதலோடும், தான் எந்த நித்திய நாட்டுக்காகப் படைக்கப் பெற்றதோ, அந்தப் பரதீசை அடைகிறது.

அமைதலுண்டானதினிமித்தம் அவர்கள் சந்தோஷப் படுகிறார்கள்; தாங்கள் நாடின துறைமுகத்தில் அவர்களைக் கொண்டுவந்து சேர்க்கிறார்.

— சங். 107:30

48. இணைப்பு

சில வேளைகளில் நாம் புது இடங்களுக்குச் செல்லும் போது, அங்கு நாம் முன்பே சென்றிருப்பதாகவோ அல்லது அந்த இடத்தோடு நமக்குப் புலப்படாத ஏதோவொரு தொடர்பு இருப்பதாகவோ உணருகிறோம். இதற்கு மூன்று விளக்கங்கள் தரலாம்.

முதலாவது அந்த இடங்களுக்குச் சென்ற வேறு யாரோ ஒருவர், அவற்றைப்பற்றி சிந்தித்து, நாம் அறியாமலேயே தம் எண்ணங்களைப் பூடகமான முறையில் நமக்கு அறிவித் திருக்கலாம்.

இரண்டாவது, அதைப்போன்ற வேறு இடங்களை நாம் பார்த்திருக்கலாம். அந்த ஒற்றுமையின் நினைவு நம் மனதுக்கு ஒரு புதுத்தோற்றமாகக் காட்சி தரலாம்.

மூன்றாவது, நமது உணர்வின்றியே நமது ஆத்துமா காணப்படாத உலகுடன் தொடர்பு கொண்டிருப்பதாலும், அவ்வுலகின் தோற்றங்கள் நம்மை ஆக்கிரமித்துக்கொள்வதாலும், அவ்வுலகின் பிரதிபிம்பமொன்று நம் மனதில் பதிந்திருக்கலாம்.

இவ்வுலகம், காணப்படாத உலகின் நகல் - அதாவது, ஆவிக்குரிய உலகம் லௌகீக உலகில் வெளிப்படுகிறது. நமது எண்ணங்கள் இவ்விரு உலகங்களுக்கு இடையேயுள்ள ஒற்றுமையால் அடிக்கடி பாதிக்கப்பெறுகின்றன. நாம் போதுமான அளவு நேரத்தைத் தியானத்தில் கழித்தால், இரு உலகங்களுக்கும் இடையே இருக்கும் இந்த இணைப்பை மிகத் தெளிவாகவும், துல்லியமாகவும் காணலாம்.

வானங்கள் உம்முடையது. பூமியும் உம்முடையது. பூலோகத்தையும் அதிலுள்ள யாவையும் நீரே அஸ்திபாரப் படுத்தினீர்.

— சங். 89:11

49. இனிப்பு ருசி

இமயமலைப் பகுதியில் குகையொன்றில் வாழ்ந்துவந்த ஒரு காட்டு மனிதனை நான் சந்தித்தேன். அவன் இனிப்புப் பண்டம் எதனையும் பார்த்ததோ, ருசித்ததோ கிடையாது. என் நண்பன் அதை அவனுக்குக் கொடுத்தபோது முதலில் அவன் அதைச் சந்தேகத்துடன் நோக்கினான். ஆனால் அதை ருசித்த போதோ ஓர் அதிசயமும், ஆனந்தமும் நிறைந்த உணர்வு அவன் முகத்தில் பிரதிபலித்தது; எவ்வளவாக அதை அவன் அனுபவித்து ருசித்தான் என்பதைக் காட்டிற்று. அதை ருசிக்கு முன் அவ்வாறு ஒரு பொருள் இருப்பதையும், இல்லாததையும் அவன் பொருட்படுத்தவில்லை. அவன் நாவுக்கு இனிப்புப் பண்டங்களின் தித்திப்பை உணரும் தன்மை இருந்த தென்னவோ உண்மைதான். ஆனால் ருசியின் உணர்வைப் பற்றிய விவரம் அல்ல, அந்தப் பலகாரத்தின் ருசியே அவனுக்கு மகிழ்வைத் தந்தது. அதேபோல் மனிதனுக்கு மெய்ப்

பொருளைப் பற்றிய உணர்வு இருக்கிறது. இறைவனைக் காணக்கூடிய ஆற்றலும் அவனுக்குள்ளே இருக்கிறது. அவரைக் காணும் அனுபவம் ஒன்றுதான் தேவை.

பாவத்தின் விளைவாக இறைவனின் பிரசன்னத்தை உணரும் ஆன்மீக உணர்வு மங்கிப்போகலாம். அப்போது மனிதன், ஆண்டவன் இருக்கிறார் என்ற உண்மையையே மறுத்தும் கூறலாம். ஆனால் மனம் திருந்தி தேவனைத் தேடுவானானால் அவன் முயற்சிக்குப் பலன் கிடைக்கும். அவர் ஆசியின் அருளும் கிட்டும். அதன் பிறகு ஓர் ஊமையனைப் போல தான் ருசித்த இனிய அனுபவத்தைக் குறித்துப் பேச முடியாவிட்டாலும் அவன் வாழ்வும் கிரியைகளும் அந்த அனுபவத்தின் உண்மையை நிரூபித்தே தீரும்.

உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும் உம்முடைய வலது பாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு.

— சங். 16:11

50. அன்பின் பெருமை

இந்தியாவின் மலைச்சாரல்களில் ஒன்றில் பக்தியுள்ள ஒரு கிறிஸ்தவன் தன் வீட்டில் தனியாக ஜெபித்துக் கொண்டிருந்த போது மூன்று திருடர்கள் அவன் அறையில் திருட்டுத்தனமாகப் புகுந்து தங்கள் கையிலகப்பட்டதையெல்லாம் அபகரித்துக் கொண்டனர். ஜெபித்து முடித்ததும் அம் மனிதன் தன் பொருட்கள் களவுபோயிற்றென்று கண்டு கொண்டான். ஜெபிக்கும்போது ஒரு பெட்டியின்மீது அவன் சிரம் கவிழ்ந்து வணங்கிக் கொண்டிருந்ததால் அப்பெட்டி மட்டும் விடப்பட்டுப் போயிருந்தது. இப்பெட்டியினுள்தான் பணமும், விலைமதிப் புயர்ந்த பொருட்களுமிருந்தன. அக்கிறிஸ்தவன் தன் கையில் அப்பெட்டியைத் தூக்கிக்கொண்டு அத்திருடர் பின்னால் ஓடினான். 'நில்லுங்கள், விலையேறப்பெற்றவைகளை விட்டு விட்டுப் போய்விட்டீர்களே; அவற்றை உங்களுக்குக் கொண்டு வந்திருக்கிறேன். என் தேவையைவிட உங்களுக்கு இவை

"இதோ இந்தப் பெட்டியை விட்டுவிட்டீர்களே!"
(கதை எண் 50)

அதிகமாய்த் தேவைப்படலாம்' என்று கூவினான். கள்வர் இதைக்கேட்டபோது இது சூழ்ச்சி என்று நினைத்தார்கள். பின்னர் அவன் கையில் ஆயுதங்கள் ஏதுமில்லை என்று தெரிந்துகொண்டு அவனிடம் திரும்பி வந்தார்கள். அப் பக்தன் அவர்களிடம் தங்களுக்கு வேண்டியதெல்லாம் எடுத்துச் செல்லும்படி கேட்டுக்கொண்டான். முன்பே தெரிந்திருந்தால் அவற்றைத்தானே அவர்களுக்கு மனமுவந்து கொடுத்திருக்கக் கூடுமென அங்கலாய்த்தான். அக்கள்வர்களோ இம்மனிதனின் விசித்திர நடத்தையைக் கண்டு வியந்தார்கள்; மனம் மாறினார்கள்.

'இத்தகைய உத்தமர்களும் உலகிலிருப்பார்கள் என்று எங்களுக்கு இதுவரை தெரியாது. நீரே இவ்வளவு நல்லவராக இருந்தால் உம்மை இவ்வாறு தெய்வீகமுள்ளவராக மாற்றிய உமது இரட்சகர் இன்னும் எவ்வளவு அற்புதமானவராக இருக்க வேண்டும்' என்று கூறி கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டார்கள்.

உமது நாமத்தைத் துதிப்பேன்; நீர் அதிசயமானவை களைச் செய்தீர்.

— ஏசாயா 25:1

சாது சுந்தர் சிங்
அருளுரைக் குட்டிக்கதைகள்
ஐம்பது

இந்த நூற்றாண்டின் தனிப்பெரும் தேவஊழியரான சாது சுந்தர் சிங் அவர்களை அறியாத கிறிஸ்தவர்களே இருக்க முடியாது. இந்தியாவில் மட்டுமின்றி உலகின் பல நாடுகளிலும் இவர் தேவனுடைய நற்செய்தியை அறிவித்து வந்தார். இவரது பணியால் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டோர் கணக்கில் அடங்காதோர்.

இந்த நூலில் சாது சுந்தர் சிங் தனது வல்லமை வாய்ந்த பிரசங்கங்களில் பயன்படுத்திய ஐம்பது திருஷ்டாந்தக் கதைகள் சுவையான முறையில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. சிறுவர் முதல் பெரியோர் வரை அனைவருமே இதைத் தியான நூலாகவும் பயன்படுத்தலாம்.

விலை ரூ. 7–50

சிறுவர் / இளம் வாலிபர் / பெரியோர்